526

தெய்வமே
உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குப் போதியும்.

பசுமலை

# மாட்டு வைத்திய போதினி



பசுமலை மாட்டு வைத்திய

வேதபோதகம் தாவீது என்பவரால்

இயற்றப்பட்டது.

1927

விலை அணா 8.

Z2·311:4:6
N27
85923

Press, Pasumalai—1927.

2-

"தெய்வமே,
உமக்குப் பிரியமானதைச் செய்ய
எனக்குப் போதியும்"

16 SEP

---

பசுமலை

# மாட்டு வைத்திய போதினி

---

இது

சமுசாரிகளுடைய உபயோகத்திற்காக

மாட்டுவைத்தியரும், சித்திராசிரியரும், சிற்பவேலையி
லும் (Engraving), ரிலீவ் குளோப் செய்வதிலும்,
4 மெடல்கள் பெற்றவரும்,
கல் சிற்பாசாரியும்,
சுப்பீரியர் பேட்மின்டன் பந்து செய்பவருமாகிய,
வேதபோதகம் தாவீது உபாத்தியாயரால்
இயற்றப்பட்டது.

---

1927

*Copyright.* விலை அணா 8.

A. M LENOX PRESS, PASUMALAI—1927.

# ஆத்தும வைத்தியம்.

## சத்தியவேதம்.

இந்தப் புஸ்தகம் தேவசித்தத்தையும், மனிதனுடை நிலைமையையும், ரக்ஷிப்பின் வழியையும், பாவிகளுடைய நிர்ப்பந்தத்தையும், விசுவாசிகளுடைய சந்தோஷத்தையு சேர்த்துக் காட்டுகிறது.

அதினுடைய உபதேசங்கள் பரிசுத்தமாயும், தத்துவ போதகம் அடங்கியதாயும், அதில் சொல்லப்படுகிற சரித் திரங்கள் உண்மையும், அதில் கூறப்படுகிற முடிவுகள் மாருததாயுமிருக்கிறது.

நீ ஞானவானயிருக்கும்படி அதை வாசி. பத்திரமாய்க் காக்கப்படும்படி அதை நம்பு. பரிசுத்தவானாகும்படி அதை நடக்கைக்குக் கொண்டுவா. அதில் உன்னை வழி நடத்த வெளிச்சமும், உன்னை ஆதரிக்க ஞானகாரமும், உன்னை ஆறுதல்படுத்த சந்தோஷமும் உண்டு. அதுதான் பிரயாணிகளின் படம், யாத்திரிகரின் ஊன்றுகோல் வழிகாட்டிக்கு திசைகாட்டுங் கருவி, யுத்தவீரனின் பட்டயம், கிறிஸ்தவனின் சாசனம். இதன் மூலமாக பரதீ திரும்பக்கிடைக்கிறது. மோக்ஷ வாசல் திறக்கப்படுகிறது

நரகத்தின் பாதை அடைபடுகிறது. கிறிஸ்துவே அதினுடைய நாயகர். அதின் நோக்கம் நமது நன்மை. தெய்வ மகிமையே அதின் இலக்கு. அதுவே நமது இருதயத்தை ஆண்டு ஜீவபாதையில் நம்மை நடத்த வேண்டும். அதை நிறுத்தி வாசி, அடிக்கடி வாசி, ஜெபத்தோடு வாசி. அதுதான் நமது ஆஸ்தியின் களஞ்சியம், பரதீசின் மகிமை, நமது இன்பத்தின் ஊற்று. அது உன் ஜீவியகாலத்தில் கொடுக்கப்பட்டு, நியாயத்தீர்ப்பின் நாளில் திறக்கப்பட்டு என்றென்றைக்கும் நினைவுகூரப்படும். அது உன்னை எல்லாவற்றிற்கும் மேலான உத்தரவாதத்திற்குள் ஆக்குகிறது. உன்னுடைய பெரியவேலைக்குப் பதிலளிக்கிறது. அதினுடைய பரிசுத்தத்தை அசட்டை செய்கிறவர்களை ஆக்கினைக்குட்படுத்துகிறது.

| அட்டவணை. | | பக்கம் |
|---|---|---|
| 1. | பொதுக்குறிப்பு .. .. | 9 |
| 2. | தலை .. .. | 33 |
| 3. | கால் .. .. | 36 |
| 4. | கண் .. .. | 47 |
| 5. | மூக்கு .. .. | 54 |
| 6. | வாய் .. .. | 59 |
| 7. | நாக்கு .. .. | 67 |
| 8. | காது .. .. | 68 |
| 9. | வால் .. .. | 69 |
| 10. | வயிறு .. .. | 70 |
| 11. | வீக்கம் .. .. | 73 |
| 12. | விஷம் .. .. | 81 |
| 13. | சன்னி வலிப்பு .. .. | 84 |
| 14. | நீர்த்தாரை இரத்த சம்பந்தமான நோய்கள் | 87 |
| 15. | தோலின்மேல் காணப்படுகிற நோய்கள் | 91 |

1526



# முகவுரை.

ஆக்கியோன் மாடுகளுக்கு வைத்தியம் செய்ய ஆரம்பித்தது 1898-ம் வருஷம். ஆக்கியோனுடைய தகப்பனார் தமையனார் மாமனார் முதலியவர்கள் தமிழ் வைத்தியம் செய்கிறவர்களாயிருந்தபடியால், கூடியபோதெல்லாம் வியாதியஸ்தரை பார்க்கக் கூட்டிப்போய் கைபிடி சாஸ்திரம் சொல்லிக்கொடுத்து மருந்துகள் செய்யும் விதமும் படிப்பித்தார்கள்.

ஆனால் இங்கிலீஷ் வைத்தியசாலை எங்கும் இருக்கிறதைப்பார்த்து தமிழ் வைத்தியம் செய்ய மனதைரியமில்லாமலிருக்க பக்கத்து வீட்டில் அருமையான பசு ஒன்றுக்கு நோய் வந்து 3 காரோத வைத்தியம் செய்ய ஆள் அகப்படாமல் ஒரு பசு மரித்துப்போனதைப் பார்த்து இதுதான் நான் படிக்கவேண்டிய வைத்தியம் என்று எண்ணி மதுரை புதுமண்டபத்தில் மாட்டு வைத்திய புஸ்தகம் ஒன்று வாங்கி வாசித்து செய்ய முயற்சித்தவைகள் கடவுள் கிருபையால் கைகூடினது. 1906-ல் ஒரு சிறிய புஸ்தகம் ("தெளிவான மாட்டுவைத்தியம்") 15 பக்கத்தில் பதிப்பித்தேன். இப்போதும் 21 வருஷம் ஆகிறது. கடந்த 21 வருஷ அனுபவத்தை நாட்டுச் சமுசாரிகளுடைய நன்மையைக்கருதி இந்த இரண்டாம் புஸ்தகத்தை பதிப்பிக்கிறேன்.

நம்முடைய நாட்டில் அநேக மாட்டுவைத்திய புஸ்தகங்களுண்டு. ஆனால் மாட்டுவைத்தியம் செய்யவேண்டுமென்று படிக்க, அதிக கருத்தாய் படிக்கிறவர்கள் மட்டும் விபரம் அறிந்துகொள்ளமுடியும். ஏனென்றால் நோய்க்கும், நோய்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற பேர்களுக்

கும் அநேக இடங்களில் சம்பந்தம் கிடையாது. புஸ்தகம் கையிலிருந்தாலும், மாடு கஷ்டப்படும்போது என்ன நோய், புஸ்தகத்தில் எங்கே பார்க்கிறது என்பதைப்பற்றி விபரம் கிடையாது. ஆகையால் முதலிலிருந்து கடைசிவரையும் வாசித்தால் எங்கேயாவது ஒருபக்கம் மாட்டுக்குச் செய்கிற குறிப்பைப் பார்க்கலாம். அல்லாமலும், கழிச்சல், வெதுப்பு, அடைப்பு இப்படிப்பட்ட நோய்கள், எந்தெந்தக் காலத்தில் உண்டாகும் என்புதைப்பற்றிச் சொல்லாமல், ஒரேவிதமான குணத்தைக் காட்டிய அநேக நோய்களை புஸ்தகத்தின் பல இடங்களில் சொல்லி வித்தியாசப்படுத்தி அறியக்கூடாத மயக்கத்தைக் கொடுக்கிறது. ஆகையால் ஷை புஸ்தகங்கள், கொஞ்சப் படிப்புள்ள சமுசாரிகளுக்கு அவசரத்துக்கு உதவாத வைத்தியமாகவே காணப்படும். இதை நீக்கும்படி இப்புஸ்தகத்தை சமுசாரிகளுடைய பிரயோசனத்துக்கென்று எழுதுகிறேன்.

சரீரத்தின் எந்தெந்த அவயவத்தில் நோய்கள் காணப்படுகிறதோ, அதற்குரிய தலைப்பிலிருந்து வாசித்துக் கண்டுபிடிக்கவும். அப்படிக் காணமுடியாவிட்டால் பொதுக் குறிப்பில் பார்க்கவேண்டும். தலை, கண், மூக்கு மூன்றிலும் ஷை நோய்கள் காணப்பட்டால், மூன்று வகையையும் பார்க்கவேண்டும். ஒவ்வொன்றுக்குமுள்ள அகராதியைப் பார்க்கவும்

636·2



# I. வைத்தியம் செய்ய முக்கிய குறிப்புகள்.

1. இப்புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற மருந்துப்பக்குவங்கள் பெரிய மாட்டுக்குரிய முழுப்பாகமே. ஆகையால் சிறிய மாடு கன்றுகளுக்கு, தாததுக்குத் தக்கபடி நிதானித்து முக்கால், அரை, கால்பாகமாக குறைத்து செய்யவும்.

2. கீழே காட்டப்பட்ட வாய்ப்பாட்டையும் கவனிக்கவேண்டும்.

2 வயசு மாட்டுக்கு முழுப்பாகம்

3 வயசுக் குதிரைக்கு குதிரைக்குரிய முழுப்பாகம்

2 வயசு ஆட்டுக்கு ஆட்டுக்குரிய முழுப்பாகம்

$1\frac{1}{2}$ வயசு நாய்க்கு நாய்க்குரிய முழுப்பாகம்

3 மீத்திற்கு உள்பட்ட பிராணிகளுக்கு அந்தந்த ஜாதிக்குரிய முழுப்பாகத்தில் ($\frac{1}{16}$) மாகாணிப் பங்குதான் செய்யவேண்டும்.

3. a. குதிரைக்கு 1 பங்கானல் மாட்டுக்கு $1\frac{1}{2}$ பங்கு.

b. ஆட்டுக்கு குதிரைக்குக்கொடுப்பதில் ($\frac{1}{5}$) ஐந்தில் ஒரு பங்கு

c. நாய்க்கு குதிரைக்குக் கொடுப்பதில் ($\frac{1}{16}$) பதினறில் ஒரு பங்கு

d. நாய்க்கும் மனுஷனுக்கும் ஒரே அளவு

e. யானைக்கு குதிரையைவிட 6 பங்கு அதிகம்

*f*. ஒட்டகத்திற்கு குதிரையைவிட 4 பங்கு அதிகம்

*g*. ஜீவப்பிராணிகளுக்கு மருந்து கொடுக்கும் போது வேலை வாங்கப்படாது.

---

## கவனிப்பு.

இப்புத்தகம் வாசித்தறிவதில் ஏதாவது சந்தேகமிருந்தாலும் அல்லது மருந்து செய்கிற விஷயத்தில் சந்தேகமிருந்தாலும், முத்திரை உள்ளே வைத்து கடிதம் எழுதினால் பதில் எழுதப்படும்.

யானை, ஒட்டகம், குதிரை, மாடு, ஆடு, நாய் முதலியவைகளுக்கும் இவ்வைத்தியம் பொருந்தும்.

இதில் சொல்லப்பட்டிருக்கிற ஒரு பலம்=ரூபாயிடை 6 என்று அறியவும்.

1 குன்றிமணி அல்லது 1 குன்னிமுத்து = 2 நெல்லிடைக்குச்சரி.

இப்படிக்கு

நம்முடைய நாட்டு நன்மையைக் கருதும் வைத்தியர்

வேதபோதகம் தாவீது, உபாத்தியாயர்,

பசுமலை, மதுரை.

## இன்னும் சில ஆலோசனைகள்.

மழைத் தாழ்ச்சியினால் உஷ்ணம் அதிகரித்து கொள்ளைநோய் கண்டால் அதற்கு குளிர்ச்சிக்குரிய விளக்கெண்ணெயை முதலாவது பேதிக்குக் கொடுக்கவும். குளிர்காலத்திலுண்டாகிற எவ்வித கொள்ளை நோய்க்கும், கரியபோளத்தை பேதிக்குக்கொடுத்து அந்தந்த வியாதிக்குரிய மருந்துகளைக் கொடுப்பது உத்தமம். கழிச்சலுக்கும் சீதக்கழிச்சலுக்கும் விளக்கெண்ணெய் சொல்லிய அளவுப்படி கூசாமல் கொடுப்பதுதான் உத்தமம்.

## இரண வைத்தியம்.

அறுக்கும்போது நரம்பு அறுபட்டால், இரத்தத்தை நிறுத்தவேண்டிய சமயத்தில், சிறிய நரம்பு ரத்தமானால் சீனக்காரத்தை தூள் செய்து போட்டு தேய்த்தாலும் தேய்க்கலாம் அல்லது துத்தத்தை தூள் செய்து போட்டு தேய்த்தாலும் நிற்கும். இதற்கும் நிற்காவிட்டால் ஷை தூள் போட்டு அதின்மேல் ஈரத்துணியை பொதிந்து வைத்துக் கட்ட அல்லது தைக்கலாம்; அல்லது ஷை நரம்பு பெரிதானால் ரத்தம் நிற்காமல் அதிகம் ஓடினால் ஷை நரம்பைச்சுற்றி ஊசியினால் தைத்துக் கட்டவும். துணியைப் பொதிந்து வைத்துக்கட்டினால் மறுநாள்தான் அவிழ்த்து மருந்துபோட்டுத் தைக்கவேண்டும். ஒரே மூட்டில் சலம் பிடிக்காமல் ஆறவேண்டும். அப்படி இல்லாமல் சலம் பிடித்துவிட்டால் மூன்று நாளைக்கு ஒருதரம் காயத்தைத் திறந்து நன்றாய்ச் சுத்திசெய்து கட்டவேண்டும். மனுஷ வைத்தியம் செய்கிற இங்கிலீஷ் வைத்தியர்களுக்கு இது தப்பிதமாய்க் காணப்படலாம். ஆனால் மாட்டுவைத்தியம் செய்ய கிராமத்திலுள்ள சமுசாரிகளுக்கு இதுதான் அனுபவத்துக்குரியது. காயத்திற்குச் சொல்லப்பட்ட எந்த மருந்தையும் உபயோகிக்கலாம்.

ஹைட்ராஜரி பெர்குளோரைட் 1 நெல்லிடைக்கு 4 அவுன்ஸ் தண்ணீர் சேர்த்து காயத்தைக் கழுவுவது அதிக உத்தமம். (ஹைட்ராஜரி பெர்குளோரைட் கடுமையான நஞ்சு)

எந்த இடத்தில் எப்படி அறுக்கவேண்டும் என்பதற்கு—புத்தியை பிரயோகித்து சதையில் குறுக்கறுவை விழாதபடி அறுக்கவேண்டும்.

சில புத்துகள் ஆறாமல் அதிகரித்து வளர்ந்து கொண்டேவரும். அதை அறுத்தெடுக்கிறதுமட்டுமல்ல, தீயை வைத்து சுட்டதுபோல் வேகவைக்கக்கூடிய மருந்தை உபயோகிக்கவேண்டும். கர்பாலிக் ஆசிட், துத்தத்தூள் முதலியவைகளை சமயோசிதமாய் உபயோகிக்கவேண்டும்.

1. மாடுகள் ஏதாவது நோய்கண்டு சுணங்கி நின்றால் இன்ன நோய் இன்ன காரணம் என்று கண்டு பிடிக்க, முதலாவது வாயைத் திறந்து நாவு, பல், தொண்டை முதலிய இடங்களைக் கவனி. அப்புறம் சரீரத்தின் எந்தப் பாகத்தில் வேதனை என்பதை உன் சரீரத்தில் உணர்ந்து அதை யோசி சாணத்தையும் நீரையும் கவனி. காலத்தையும் கவனி.

2. எந்த மருந்தையும் அவசியம்போல் மூன்று நாளோ அல்லது இரண்டு நாளோ நிதானித்துக் கொடுக்கவேண்டும். சில நாள்பட்ட நோய்களுக்கு மருந்து கொடுக்கும்போது எட்டு நாளைக்கு 1 தபா வீதம், 3 தபாக் கொடுக்கவேண்டும். (1 தபா என்பது 3 நாள்.)

3. ஒரு மருந்தைச் செய்து முடிக்க பல மூலிகைகள் சொல்லும்போது எல்லா மருந்துகளும் கிடையா

விட்டாலும் உடனே கிடைத்தவைகளில் மருந்தின் அளவைச் சற்று கூட்டிச்செய்து போட்டு பிற்பாடு கிடையாத மருந்தை அவசியம்போல் தேடலாம்.

4. மாடுகளுக்கு உபயோகிக்கிற வெந்நீர்கள், இளஞ் சூடாயிருக்கவேண்டும். கடுமையான வெந்நீரைக்கொண்டு மாட்டின் தேகத்தில் கழுவினால் இலேசாய் முடி உதிர்ந்துபோம்.

5. மாடுகளுக்குக் கொடுக்கிற எந்த மருந்தையும் காடித்தண்ணீர் சோத்துக் கொடுத்தால் குளிர்ந்த தண்ணீர் ஊறல் விடலாம். மற்றப்படி வெந்நீர் ஆறவைத்து விடுவதே உசிதம்.

6. இந்த புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிற மருந்துகளின் அளவு ஒரு கோத்திற்குரியது என்று அறியவும். எங்கேயாவது பலதடவைக்கு என்று சொல்லப்பட்டிருந்தால்மட்டும், சொல்லப்பட்டபடி செய்யவும்.

## மாடுகளுக்கு மருந்து கொடுக்கும் விதம்

தண்ணீரில் கலந்த மருந்தை அல்லது கஷாய வகை முதலானவைகளை சிறிய வாயையுடைய ஒரு சாதாரண பாட்டலில் (18 அவுன்ஸ் கொண்டது அல்லது காலேயரைக்கால்படி கொண்டது.) மருந்தை அடைத்து மாட்டின் நாக்கை சற்று இழுத்துப்பிடித்துக்கொண்டு மருந்து அடைக்கப்பட்ட பாட்டலை வாய்க்குள்ளே சாய்த்துப் பிடித்தால் மருந்து சிந்தாமல் குடிக்க ஏதுவிருக்கும். தொந்தரவு இராது, புரை ஏறாது.

## சூட்டுக்கோல் செய்யும் விபரம்.

பெரிய மாட்டுக்கு காலே மூன்றுவீச அங்குல நயமான தேன் இரும்புக்கம்பியில் இரண்டடி வெட்டி ஒரு முனையில் 5 அங்குலத்தை கொஞ்சங்குறைய கால் வட்ட வளைவில் வளைத்து அடித்ததில் 3 கம்பியும் ட, போல் அடித்தது 3 கம்பியும் ஆக 6 கம்பி வேண்டியது.

இப்படியே சிறிய கன்றுகளுக்கு காலேமாகாணி அங்குல கம்பியில் சூட்டுக்கோல் செய்யவும். சூடு போட்டால் மாடு விலை எருது என்று சிலபேர் பயப்படலாம். ஆனால் வலிப்பு, இருமல், வாதம் முதலிய வியாதிகளுக்கு சூடு போடாவிட்டால் இலேசில் சுகமாகாது.



இந்த படத்தில் காட்டிய இடங்களில் மாடுகளுக்கு சூடு போடவும்.

# I. பொதுக்குறிப்பு.

அட்டவணை.

1. நன்ருய்த் தீவனந் தின்ளுமலும் தண்ணீர் குடியாமலுமிருக்கும்.

2. சிவந்த சாணமாய்ப்போடும், மாடு மெலியும்.

3. தீனியும் தின்ளுது, சாணியும்போடாது.

4. நன்ருய் இரைகின்ளுமல் கலைந்து கிரியும், பதஷ்டமாய் பார்த்து மனிதரை விரட்டிப்பாயும், பின்பு இரண்டு கண்களும் தெரியாது.

5. (a) இரையை நன்ருய் தின்னமைல் அடிக்கடி தண்ணீர் குடிக்கும், பயந்து சினந்துபார்க்கும்
(b) நன்ருய் இரைதின்ளுது, அடிக்கடி தண்ணீர் குடிக்கும்.

6. பறந்து பறந்து தீவனந்தின்னும், பல்லைக்கடிக்கடிக்கும், தலையைதாழவைத்து நிற்கும், தண்ணீர்குடிக்க விரும்பிக் கொஞ்சமாகக்குடிக்கும்.

7. நாளடைவில் வயிறு ஒட்டி மெலியும், சரீரம் சூடாக இருக்கும்.

8. தீவனந்தின்ளுமல் சரீரத்தை தேய்த்துக் கொண்டேநிற்கும்.

9. நன்ருய் இரைதின்ளுமல் மயங்கிநிற்கும், தண்ணீர்குடியாது.

10. நன்ருய் இரை தின்ளுது, இரையே தின்ளுது.

11. செருமல்நோய்-நாய் செருமினல்போல் செருமும், நீர் மஞ்சள் நிறமாய்விடும் அல்லது செருமி மூக்கில் நீர்வடிந்து நெஞ்சடைப்புக் காணும்.

12. செருமி மூச்சுவிடாமல் கூப்பிடும்.
13. அழித்துப் பொலிவதற்கு.
14. ஓடி ஓடித்திரிந்து வானத்தைப்பார்த்து நிற்கும்.
15. மயிர்சிலிர்த்து குன்னிக்கொண்டே நடக்கும்.
16. வேலையினால் நொடித்த மாட்டிற்கும், மெலிந்த மாட்டிற்கும்.

17. சகல அடைப்புக்கும் பொதுப்பிரயோகம்.
(அடைப்பு நோயின் முக்கிய குறிப்புகள்:) முக்கி முக்கி கதறும், செருமும், மயிர் சிலிர்க்கும், வாயில் நீர்வடியும்.

*a.* ஊதடைப்பானால் வயிறு ஊதும், நாலுகாலும் நடுங்கும், கழுத்துகோணும்.

*b.* முன்னடைப்பானால் முன்னங்கால் இரண்டையும் தெத்தித் தெத்திவைக்கும்.

*c.* பின்னடைப்பானால் பின்னங் தொடையும் பவன வாயும் அடைக்க வீங்கும்.

*d.* நெஞ்சடைப்பானால் நெஞ்சு வீங்கும், வாயிலிருந்து நீர் வடியும், செருமும்.

*e.* சந்தடைப்பானால் பின்னஞ்சந்து வீங்கும்.

*f.* விருட்டடைப்பானால் ஆட்டுப்பிழுக்கைபோல் சாணிபோடும்.

*g.* நீரடைப்பானால் நீர் செறுத்து முக்கும் கதறும் குன்னிநிற்கும்.

*h.* சாட்டடைப்பானால் நாக்கைநீட்டி, மூச்சு மூச்சென்று உடலைக்குலுக்கும்.

18. சால்முட்டிநோய். முன்னங்கால் இரண்டையும் தெத்தி நெஞ்சை இடுக்கி நடக்கும், குன்னி ஓங்கரிக்கும் அல்லது வயிறுஊதும், கண் சிவந்திருக்கும், வாயில் நீர்வடியும், இரத்தமாய் நீர்வடியும், முன்னங்கால் இரண்டையும் தடுமாற வைக்கும், மாறிமாறிவைக்கும், தலையை தாழ வைத்துநிற்கும், பிழுக்கைபோல் சாணிபோடும்.

19. கறணைநோய். வெயிலில்நில்லாது, நிழலைத்தேடும், தண்ணீரில்படுக்கும், நன்றாய் இரைதின்னாது, மெலிந்துபோகும், நாட்சென்றால் நெடுமயிர் வளரும், இளைக்கும்.

20. தேறாத மாட்டிற்கு பலம் உண்டாவதற்கு.

21. சோளப்பயிர், ஆமணக்கஞ் சொங்கு இவைகளை தின்ற சொக்குக்கு.

22. நன்றாய் ஜீரணியாமல் சாணிபோடும், காற்றுபறியும்.

23. மாடு மெலிந்து மூசுமூசு என்று இளைத்துச் செருமும்.

24. திருக்கி முறுக்கி நிற்கும், வெயிலில்போய் தூங்கி விழும்.

25. முதுகை நெளித்து முறுக்கிக் கீழேவிழும்.

26. சாணி நாறும்.

27. சாணிபோடாது, திமிர்ப்பிடித்துநிற்கும், ஒருநாள் சென்றால் படுத்துக்கொள்ளும், எழுந்திருக்க மாட்டாது, அதிகமாக நீர்விடும், மயிர் சிலிர்க்கும், காலை உதறும்.

28. நீர் அதிகமாயிறங்கும்.

29. அடிக்கடி நீர்விடும், வாயில் நீர்வடியும், கண்சிவக்கும்.

30. சிறுகச்சிறுக சொருக்கு நீர்விடும்.

31. சொருக்கு நீர்விடும், சாணியில் ரத்தம் கலந்தது போலிருக்கும், படபடத்து வாலைவீசும்.

32. நீர் இறங்காமல் கூப்பிட்டுக் கதறும், குன்னிநிற்கும்.

33. காளையின்கோல் அல்லது ஆண்குறியில் வீங்கும்.

34. மேல் மூச்செடுத்து நடுங்கும், காதாட்டாது.

35. நச்சுப்பல் மாடுபோல் தின்றதீவனத்தை அதப்பித் தள்ளும், ஓங்கரிக்கும், மெலியும்.

36. வயிற்றிலுண்டாகிற எல்லா வருத்தத்திற்கும்.

37. கழலை நோய்களுக்கு, தேகத்திலுண்டாகிற சகல கழலைப்புண் சிரங்குகளுக்கு.

38. ஆணிக்கழுத்துக்கு.

39. ஆருத புண்ணுக்கு.

40. கொம்பு ஒடிந்துபோனாலும் கழன்றுபோனாலும்.

41. வயிற்றில் செத்த கன்று விழ.

42. இளங்கொடியை மாடுதின்றாலும், இளங்கொடி விழாதிருந்தாலும்.

43. முடைசாய்ந்தால்.

44. எருதுக்கடங்காமல் சினையாகாதிருக்கிற மாட்டுக்கு

45. மாட்டுக்கு சுகபேதிக்கு.

46. மாடுகளுக்கு புரை ஏறினால்.

47. அடித்து ஓட்டினும் நகராமல் விழுந்துகிடக்கும்.

48. உழவில் உடல்மெலிந்தாலும் தகைபிடித்தாலும் தேறாதமாட்டிற்கு.

49. வேலையில் கள்ளத்தனம்செய்கிற மாட்டுக்கு.

50. கன்று கொள்ளாதிருந்தால்.

51. பாலில்லாதிருந்தால்.

52. மாடுகளுக்கு உண்ணிபற்றினாலும், வங்கு விழுந்தாலும.

53. தீப்பட்ட மாட்டிற்கு.

54. குன்னி நிற்கும் அல்லது குன்னி மூக்கை பூமியில் குத்தி கீழேவிழுவதற்கு

55. மாட்டின் முலைக்காம்பு வீங்கி பால் இறங்காமலிருக்கிறதற்கு

56. பால் இரத்தமாய் இறங்கினால்.

57. மாட்டுக்கு செருமல் காணும்போது மூக்குவழியாய் உதப்பி சாயும்.

58. அதிகமாய் நீர்விட்டு நாளுக்குநாள் மெலியும், தீவனம் நன்றாய்த்தின்னாது.

59. நஞ்சு வைத்தகுறி.

60. கன்றுக்கு வயிற்றழைச்சல் கண்டாலும், மாந்தத்தால் வயிறு கழிந்தாலும்.

61. மாடு ஈன்ற காலத்தில் உறுப்புத்தள்ளினால்.

62. மேல் மூச்செடுக்கும், புல்லரிக்கும், சிறு செருமலாய்செருமும், ஒரு காலை கொண்டும் இதைப் புல்மரி என்றும் சொல்வார்கள்.

1. நன்ருய் தீவனந்தின்ளுமலும் தண்ணீர் குடியாமலுமிருக்கிற மாட்டுக்கு.

குப்பைமேனி, பேய்க்குமட்டி, ஆடுதின்ளுப்பாளை இலைகள் வகைக்கு பலம் 2, வெள்ளைப்பூடு பலம் 1, வசம்பு பலம் கால், அரைக்கால்படி உப்பு, கண்டங்கத்தரிக்காய் பலம் 3, இவைகளை அரைத்து ஒருபடிமோர், அல்லது சிறுநீரில் கலக்கிக்கொடுக்கவும்.

2. சிவந்த சாணியாய்ப் போடுவதற்கு.

சிறுதும்பை தனிச் சாறு படி கால் எடுத்து காடித் தண்ணீரில் கலந்துகொடுக்கவும்.

3. தீனியும் தின்ளுது சாணியும் போடாது.

நிலஆவரை இலையை 3 பலம் எடுத்து அரைத்து 1 படி வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும், அல்லது கரியபோளம் 2 பலத்தை வெந்நீரில் கரைத்து இறுத்து பேதிக்குக்கொடுக்கவும், 7-ம் சூட்டை நடுமுதுகில் போடவும்.

4. நன்ருய் இரை தின்ளுமல் கலைந்து திரியும், பதஷ்டமாய்ப்பார்த்து மனிதரை விரட்டிப்பாயும், பின்பு இரண்டு கண்களும் தெரியாது.

ஐந்து பலம் சாளைக்கருவாட்டை அரைத்து கால்படி எலுமிச்சம்பழச்சாற்றில் கலக்கிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் அவசியமாளுல் கொடுக்கவும். 6-ம் நம்பர் சூட்டை நெற்றியிலும் 3-ம். நம்பர் சூட்டை இடது விலாவிலும்போடவும்.

5. இரையை நன்றாய்த் தின்னாமல் அடிக்கடி தண்ணீர் குடிக்கும், பயந்து சினந்து பார்ப்பதற்கு.

கருணைக்கிழங்கு, புளிய இலை அவித்தது வகைக்கு 3 பலம், அரைபடி கருங்காணத்தை நனையவைத்து ஆட்டினதும், ஆவரை இலை பலம் 3 அரைத்து எல்லாவற்றையும் சேர்த்து காடித்தண்ணீரில் கலக்கி வைத்திருந்து அதிகாலையில் கால்படி வேப்பெண்ணெய் சேர்த்துக்கொடுக்கவும் அல்லது முத்தின ஆவரம்பட்டை அல்லது இலை பலம் 5, காடிவிட்டு இடித்துப் பிழிந்தசாறு படி அரை, நல்லெண்ணெய். படி கால் கலந்து கொடுக்கத் தீரும். 3-ம் நீ சூட்டை இடது விலாவில்போடவும், அல்லது 1 படி இளநீரில் 5 பலம் ஆவரை இலையை அரைத்து ஊறவைத்திருந்து காலையில் கால்படி நல்லெண்ணெயை விட்டுக்கொடுக்கவும்.

6. பறந்து பறந்து தீவனந் தின்னும், பல்லைக் கூசிக்கடிக்கும், தலையைத் தாழவைத்து நிற்கும். தண்ணீர் குடிக்க விரும்பி கோஞ்சமாகக் குடிக்கிறதற்கு.

வெள்ளைப்பூடு பலம் 1, மஞ்சணத்தி, தைவேளை இலைகள் வகைக்கு பலம் 5 இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும், குடிக்க வெந்நீர் விடவும். 3-ம் நீ சூட்டை இடது விலாவில் போடவும். அவசியமானால் 3 நாள் காலை கொடுக்கவும்.

7. நாளடைவில் வயிறு ஒட்டி மெலியும், சரீரம் சூடாக இருப்பதற்கு.

சுக்கு, திப்பிலி வகைக்கு பலம் 1, மிளகு பலம் 3, வசம்பு, பெருங்காயம் வகைக்கு பலம் கால்; வேப்பிலை

பலம் 5, ஒரு படி வெந்நீர்விட்டு இடித்து சாறு எடுத்து மற்றவைகளை அரைத்து கலக்கிக்கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். இதற்குப்பின் நல்ல தீனிவைக்கவும்.

### 8. தீவனந்தின்னமல் சரீரத்தை தேய்த்துக் கொண்டே நிற்பதற்கு.

நன்னரிவேர் பலம் 10 அரைத்து 5 பலம் கருப்புக்கட்டியும் சேர்த்து 2 படி வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும் வெள்ளைச்சாரணத்தி சமூலம்தட்டி சிறுநீரில் கலக்கி நாசியில் பிழியவும்.

### 9. நன்ருய் இரைதின்னமல் மயங்கி நிற்கும், தண்ணீர் குடியாது.

2 பலம் கரியபோளத்தை வெந்நீரில் கரைத்து இறுத்து 3 பலம் மிளகையும் அரைத்து கலக்கிக்கொடுத்து 2 மணி நேரத்திக்குப்பின் இரண்டு இரண்டு படி வெந்நீராக அரைமணி நேரத்திக்கு ஒரு தடவைகொடுக்கவும். நாலைந்துதடவை கொடுக்கவும். பேதிபோகக் குணமாகும்.

### 10. நன்ருய் இரை தின்னதை மாட்டுக்கும் இரையே தின்னதை மாட்டுக்கும்.

சீரகம், கடுகுரோகணி வகைக்கு பலம் 2, ஓமம், கருஞ்சீரகம் வகைக்கு பலம் 1, கடுகு ஒன்றரை பலம், வெந்தயம் பலம் 3, உப்பு படி மாகாணி, ஆடாதோடை இலை பலம் 3, இவைகளை அரைத்து பசுவின்பால் படி 1-ல் ஊறவைத்து காலமே கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

## 11. (*a*) செருமல் நோய்.

நாய் செருமினுற்போல் செருமும், நீர் மஞ்சள் நிறமாய்விடும், அல்லது செருமி மூக்கில் நீர்வடிந்து நெஞ்சடைப்புக்காணும்.

மிளகு பலம் 3, சுக்கு, கருஞ்சீரகம், நாங்களம்பூச்சி என்ற நிலவேர் வகைக்கு பலம 2, திப்பிலி, வெள்ளைப் பூடு வகைக்கு பலம் 1, மூங்கில்இலை பலம் 5, பனங் காடை இறகு, (1 காடையின் இறகு, வால்முடியை ஓட் டில் போட்டு வறுத்து கரியாக்கின தூள்), இவைகளில் நாலுமருந்தைச் சேர்த்து வேளை ஒன்றுக்கு கால்படி நெய் விட்டு பிசைந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்க வும். இருவிலாவிலும் 3-ம் நெ. சூடு போடவும். நெஞ்சில் 8-ம் நெ. சூடு போடவும். சூடு போடாவிட்டால் நோய் தீராது.

(*b*) நாய் இளைத்தாற்போல் இளைக்கும், பயந்து நிற்கிறதுபோல் தோன்றும்.

இதற்கும் 11-ம் நெ. ஷை மருந்தையே கொடுக்கவும்.

## 12. செருமி மூச்சுவிடாமல் கூப்பிடுகிறதற்கு.

சுக்கு, கறிவேப்பிலை வகைக்கு பலம் 3, அத்திக் காய் படி 1, இவைகளை அரைத்து 2 படி மோரில் அல் லது சிறு நீரில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். 7-ம் நெ. சூட்டை, நடுமுதுகில் போடவும்.

## 13. அழித்துப் போலிந்தால்.

சுக்கு, ஓமம் வகைக்கு பலம் 1, எலுமிச்சை இலை, மூங்கில் இலை வகைக்கு பலம் 2, இரண்டு பலம் குதிரை லத்தியை கரைத்து இறுத்து ஷை மருந்துகளை அரைத்து கழுநீரில் கலக்கிக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

அல்லது

சென்னயுருவி இலையைக் காடி வார்த்தரைத்து அதனேடு பால்மாத்திரம் குடிக்கிற சிறு பிள்ளை மலத்தையும் சேர்த்து பசுவின் வெண்ணெயில் குழைத்து கண்ணில் போட்டுவரவும்.

## 14. ஓடி ஓடித்திரிந்து வானத்தைப்பார்த்து நிற்கிறதற்கு.

வெங்காயம், நைதவேளை, குப்பைமேனி வகைக்கு பலம் 3, வெள்ளைப்பூடு, திப்பிலி, சிறுதேக்கு வகைக்கு பலம் 1, தவிடு படி கால் அரைத்து வெந்நீரில் கலக்கி கொடுக்கவும். மூன்று வேளை கொடுக்கவும். 3-ம் நாள் சூடு இடது விலாவில் போடவும்.

## 15. மயிர் சிலிர்த்து குன்னிக்கொண்டே நடக்கிறதற்கு.

ஆவரை இலை பலம் 5, வீழி இலை பலம் 10, இரண்டையும் அரைத்து காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும் (வீழி இலையை அரைக்க, அரைக்க கலக்கிவிட வேண்டும்.)

அல்லது

வசம்பு பலம் 1, சுக்கு பலம் 2, அரைத்து 1 படி வெந்நீரில் கலக்கி புகட்டவும். 3-ம் நாள் சூட்டை இடது விலாவில் போடவும். சுக்கு, நைதவேளை இலை இவைகளை சமன் சேர்த்து சிறுநீரில் அரைத்து கண், மூக்கு, செவி இவைகளில் பிழியவும்.

## 16. வேலையினால் நொடித்த மாட்டிற்கும், மெலிந்த மாட்டிற்கும்.

காக்கையைப் பிடித்து தோல் உரித்து தலை, கால், குடல் நீக்கி 1 படி தண்ணீரில் வேகவைத்து எலும்பை

-13-



உதறி எடுத்துப்போட்டு கால்படி சாராயத்தோடு கறியைச் சேர்த்துக்கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். மாடு நன்றாய் தேறும்.

## 17. சகல அடைப்புக்கும் பொதுப்பிரயோகம்.

அடைப்பு நோயின் முக்கிய குறிப்புகள்:

முக்கி முக்கி கதறும், செருமும், மயிர்சிலிர்க்கும். வாயில் நீர் வடியும்.

*a.* ஊதடைப்பானால் வயிறூதும், நாலுகாலும் நடுங்கும், கழுத்துக் கோணும்.

*b.* முன்னடைப்பானால் முன்னங்கால் இரண்டையும் தெத்தி தெத்தி வைக்கும்.

*c.* பின்னடைப்பானால் பின்னங்தொடையும் பவன வாயும் அடைக்க வீங்கும்.

*d.* நெஞ்சடைப்பானால் நெஞ்சு வீங்கும், வாயிலிருந்து நீர்வடியும், செருமும்.

*e.* சந்தடைப்பானால் பின்னஞ்சந்து வீங்கும்.

*f.* நீர் அடைப்பானால் நீர் செறுத்து முக்கும் கதறும், குன்னி நிற்கும்.

*g.* சரட்டடைப்பானால் நாக்கை நீட்டி மூச்சு மூச்சென்று உடலைக் குலுக்கும்.

*h.* விருட்டடைப்பானால் ஆட்டுப்புழுக்கை போல் சாணிபோடும்.

ஷெ குறிப்புகளில் எது இருந்தாலும் முதலாவது ½ படி விளக்கெண்ணெயைக் கொடுத்து 2 மணி நேரத்துக்குப்பின் 2 படி வெந்நீர் வீதம் அரைமணிக்கு ஒருதடவையாக மூன்று நான்கு தடவைகொடுக்க பேதியாகும் நன்றாய்ப் பேதியானபின் வெள்ளைப்பூடு பலம் 1, வசம்பு பலம் ¼, வெற்றிலை பலம் 5, மிளகு பலம் 3, சிறு தும்பை, குப்பைமேனி, நைவேளை, நொச்சிக்கொழுந்து வகைக்கு கைப்பிடி இரண்டு சேர்த்து இடித்து 2 படி காடித்தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும்.

3-ம்நெ சூட்டை இருவிலாவிலும், 8-ம்நெ சூட்டை வீக்கங்களிலும், நெரிஞ்சிக்கொழுந்து, சீந்திக்கொழுந்து, கொல்லன்கோவைக்கிழங்கு, வேலிப்பருத்திவேர், பேய்பீக்க இலை, மிளகு இவைகளில் மூன்று மருந்தைச் சேர்த்து சிறுநீர் விட்டு தட்டி வடிகட்டி கண், நாசி, செவிகளில் பிழியவும்.

## 18. ஈரல்முட்டி நோய்.

முன்னங்கால் இரண்டையும் தெத்தி நெஞ்சை இடுக்கி நடக்கும், குன்னி ஓங்கரிக்கும் அல்லது வயிறு ஊதும், கண் சிவந்திருக்கும் வாயில் நீர்வடியும், இரத்தமாய் நீர்விடும், முன்னங்கால் இரண்டையும் தடுமாறி வைக்கும், மாறி மாறி வைக்கும். தலையைதாழ வைத்து நிற்கும், பிழுக்கைபோல் சாணிபோடும்.

இதற்கு முந்திய 17-ம் நம்பரில் சொல்லியபடி பேதிக்குக் கொடுத்து பேதிபோனபின்,

மிளகு, வெள்ளைப்பூடு வகைக்கு பலம் 1, வசம்பு, இலுப்பை அரைப்பு வகைக்கு பலம் ¼. இவைகளை அரைத்து ¼ படி வெண்ணெயில் குழப்பிக் கொடுக்கவும். 8-ம்நெ சூட்டை இரண்டுகாலுக்கும் இடையில், நெஞ்சில் போடவும். 3-ம்நெ சூட்டை இரு விலாவிலும் போடவும்.

## 19. கறணை நோய்.—

வெயிலில்நில்லாது, நிழலைத்தேடும், தண்ணீரில் படுக்கும், நன்ருய் இரை தின்ருது, மெலிந்துபோகும், நாட்சென்ருல்நெடுமயிர் வளரும், இளைக்கும்.

அத்திப்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு வகைக்கு படி 1, மீன் கழுவின தண்ணீர் படி 1, சாளைமீன் பலம் 5, ஓரிதழ் தாமரை, ஆனைவணங்கி வகைக்கு பலம் 3, ஆவரம்பட்டை பலம் 1, பேய்குமட்டிக்காய் 1, இவைகளில் கிடைக்கக்கூடிய 5 மருந்தை அரைத்து 1படி பனங்கள்ளில் அல்லது காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும் (பனங்கள் தான் நல்லது). மயிர் வளர்ந்த மாட்டுக்கு சுரை இலையை அரைத்து காலையில் தவாலை போடவும். சாயுந்தரத்தில் குளிப்பாட்டிஞல் மூடி உதிர்ந்துபோம். இருவிலாவிலும் 3-ம் நிர். சூடு போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

## 20. தேருத மாட்டிற்கு பலத்திற்கு.

பேய் குமட்டிக்காய்ச்சாறு படி காலேயரைக்கால், விளக்கெண்ணெய் படி ½, இரண்டையும் கலந்துபேதிக்குக் கொடுக்கவேண்டும். நன்ருய்பேதிபோஞல் மாடு தேறும்.

## 21. சோளப்பயிர், ஆமணக்குச் சோங்கு, இவைகளை தின்ற சோக்குக்கு.

மிளகு, நாவற்கொட்டை, கொழுஞ்சி இலை, அவுரி இலை, வகைக்கு பலம் 3, இவைகளில்கிடைக்கக்கூடிய இரண்டு மருந்தை அரைத்து 1 படி பசுவின்பாலில், பால் கிடையாவிட்டால் 1 படி இள வெந்நீரில் கலக்கி உடனே கொடுக்கவும். பசுவின்பால்தான் நல்லது

மிளகும் தைவேளையும் அல்லது சூடமும் துளசியும் மென்று முதலாவது நாசியிலும் காதிலும் ஊதவும்

மயங்கிக் கிடக்கிற மாடு உடனே தலைதூக்கும் ஆனல் உள்ளுக்குக் கொடுக்கவேண்டிய மருந்தை ½ மணி நேரத்திக்குள் கொடுக்காவிட்டால் மயக்கம் திரும்பி மாட்டைக் கொன்றுபோட்டாலும் போடலாம்.

## 22. நன்ருய் ஜீரணியாமல் சாணிபோடும். காற்று பறிந்தால்.

5 பலம் வெற்றிலையும், 3 பலம் மிளகும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும் குடிக்க வெந்நீர்விடவும். 3-ம் நிர். சூட்டை இடுதுவிலாவில் போடவும்.

## 23. மாடு மேலிந்து மூசு மூசு என்று இளைத்துச் செருமும்.

இலவங்கப்பட்டை, அதிமதுரம் வகைக்கு பலம் 1, கிராம்பு, ஏலரிசி வகைக்கு பலம் அரை, நீர்பூலாத்திவேர் பலம் 3, அரைத்து, பசுவின்பால் 1 படியில் கலக்கி கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும்.

## 24. திருக்கி முறுக்கி நிற்கும். வெயிலில் போய் தூங்கிநிற்கும் அல்லது தூங்கிவிழும்.

வெற்றிலை பலம் 5, வசம்பு பலம் 1, தலைசுருளி வேர் பலம் 3, இவைகளை அரைத்து 1 படி காடியில் கலக்கி புகட்ட தீரும். 3 நாள் கொடுக்கவும், முதுகில் 7-ம் நீ. சூடுபோடவும்.

## 25. முதுகை நெளித்து முறுக்கிக் கீழேவிழுந்தால்.

வெள்ளைக்காக்கணத்திஇலை நாய்பாகல்இலை, குன்றிமுத்துஇலை வகைக்கு பலம் 5 அரைத்து தேகத்தில் பூசியும், சிறுநீரில் கலக்கி நாசியிலும் நசியமிடவும்.

26. சாணி நாறினுல்.

மிளகு பலம் 3, ஈருள்ளி பலம் 5. இலுப்பைஇலை பலம் 6 இவைகளை அரைத்து கால்படி சாராயத்தில் கலக்கிக்கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும், குடிக்க வெந்நீர் விடவும்.

27. சாணிபோடாது, திமிர்பிடித்து நிற்கும், ஒரு நாள் சென்றுல் படுத்துக்கொள்ளும், எழுந்திருக்கமாட்டாது, அதிகமாக நீர் விடும், மயிர் சிலிர்க்கும், காலை உதறும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, வெள்ளைப்பூடு வகைக்குப் பலம் 1, வெங்காயம் பலம் 3, அரைத்து 1 படி பனங்கள் அல்லது காடித் தண்ணீரில் கலக்கிக்கொடுக்கத் தீரும். நடுமுதுகில் 7-ம் நீர். சூடுபோடவும்.

28. நீர் அதிகமாக இறங்கினுல்.

10 பலம் செங்கழுநீர் தண்டை இடித்து 1 படி சாறு எடுத்து 2 பலம் எலுமிச்சம் வேரையும் அரைத்து கலக்கிக்கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

29. அடிக்கடி நீர் விடும், வாயில் நீர்வடியும், கண் சிவக்கும்.

மிளகு பலம் 3, வெற்றிலை பலம் 5, இரண்டையும் அரைத்து கால்படி வெண்ணெயில் குழப்பிக்கொடுக்கவும்.

30. சிறுகச்சிறுக சொருக்கு நீர் விட்டால்.

ஆவாரம்பட்டை, பூ, இலை வகைக்கு பலம் 2, பேய்பீக்கஞ்சாறு படி அரை, வெந்நீர் படி 1-ல் கலக்கிக்கொடுக்கவும்.

31. சொருக்கு நீர்விடும், சாணியில் இரத்தம் கலந்ததுபோலிருக்கும், படபடத்து வாலை வீசும்.

ஆலம்விழுதுக் கொழுந்து பலம் 3, ஈருள்ளி பலம் 10 இரண்டையும் அரைத்து 1 படி தாழைவிழுதுச் சாற்றில் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் நிர். சூட்டை இடது விலாவில் போடவும்.

32. நீர் இறங்காமல் கூப்பிட்டுக்கதறும், குன்னி நிற்கும்.

ஊமச்சி என்ற நத்தையை இடித்தசாறு படி அரை, 4 முற்றின தேங்காய்ப்பால் அல்லது வாழையை இடித்துப் பிழிந்த சாறு படி அரை, இரண்டையும் கலக்கி புகட்டவும். நடுமுதுகில் 7-ம் நிர். சூட்டைப்போடவும்.

33. காளையின் கோல் அல்லது ஆண்குறியில் வீங்கினால்.

வேப்பங்கொழுந்து, மஞ்சள், வசம்பு சமமாய் சேர்த்து அரைத்து வீக்கத்தில் பூசவும்.

34. மேல்முச்செடுத்து நடுங்கும், காதாட்டாது. (இதைப் புல்மரி என்று சொல்வார்கள்.)

3 பலம் குன்னிமுத்து இலையை அரைத்து 2 படி வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். குடிக்க வெந்நீர் வி...வும். இதில் 62-ஆவதையும் பார்க்கவும்.

- 16 -



35. நச்சுப்பல் மாடுபோல் தின்ற தீவனத்தை அதப்பித் தள்ளும், ஓங்கரிக்கும், மெலியும்.

குப்பைமேனி, தைவேளை வகைக்கு பலம் 5, வசம்பு பலம் 1 அரைத்து 1 படி பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுத்து 3-ம் நீர். சூட்டை இடது விலாவில் போடவும்.

36. வயிற்றிலுண்டாகிற எல்லாவியாதிக்கும்.

பேதிக்குக் கொடுப்பதே உசிதம். வெயில்காலத்தில் சில சமயத்தில் பேதிபோனாலும்கூட பேதிக்கு விளக்கெண்ணெய் கால் படி கொடுப்பது நல்லது. பேதி நிற்கும்.

37. கழலை நோய்களுக்கும்; தேகத்திலுண்டாகிற சகல கழலைப்புண், சிரங்குகளுக்கும்.

கரியபோளம் பலம் 2, வெந்நீரில் கலக்கி இறுத்துக் கொடுத்து இரண்டு மணி நேரத்துக்குப்பின், 2 படி வெந்நீர் வீதம் அரை மணி நேரத்துக்கு 1 தடவை வீதம் 4 தடவை கொடுக்க பேதியாகும். மறுநாள் 1 பலம் கழுதை மண்டையோடும், 2 செவ்வால் அரணையை கால் படி வேப்பெண்ணெயில் போட்டு காய்ச்சி நுரை அமர்ந்தபின் அரணையை எடுத்துப்போட்டு மாவிலங்கு இலைச் சாறுவது, சுடலாவரை இலைச்சாறுவது தனிச்சாறு கால் படி சேர்த்து எல்லாவற்றோடும் எலும்புத் தூளையும் சேர்த்துக்கொடுக்கவும். தவளை நோய்க்கும் இதுவே ஏற்றது. நல்ல மருந்து.

## 38. ஆணிக்கழுத்துக்கு

கழுத்தில் ஆணி இருந்தால் ஷெ கட்டியில் கொடிக்கள்ளிப்பால், ஒருநாள் விட்டு ஒருநாள் வீதம், மூன்று தடவை அடித்து மூன்று நாள் பொறுத்து ஆணியை இழித்தால், ஆணிபந்துபோல் கையால் நகட்டி எடுக்க வந்துவிடும். அப்புறம் டிஞ்சர் அயோடின் (Iodine Tincture) போட்டுத்தைக்கவும் ஒரே தடவையில் எவ்வளவு பெரிய கட்டியும் ஆறும். செய்யத்தெரியாமையினால் சீழ் பிடித்தால் மூன்று நாளைக்கு ஒருதடவை அவசியமானால் சுத்திசெய்து ஷெ மருந்தைப்போட்டுத் தைக்கவும்.

## 39. ஆறாத புண்ணுக்கு.

குழாய்க்கெந்தகம், அவரிநீலக்கட்டி வகைக்கு கால் பலம் சேர்த்து வேப்பெண்ணெய் விட்டு ஒருச்சாமம் அரைத்து டப்பாவில் வைத்துக்கொண்டு போடவும். (இந்த மருந்து நாள்பட்டதானால் உதவாது.) டிஞ்சர் அயோடின் புண்ணுக்குப் போடலாம் புழு சாகும், புண் ஆறும். கற்பூர தைலத்தை புழுத்த புண்ணில் விட்டால் புழுச்சாகும், புண் ஆறும். டிஞ்சர் அயோடின் இங்கிலீஷ் மருந்து ஷாப்பில் வாங்கலாம். இரண்டணா ரூபாய் இடை குடத்தை வீசம்படி தேங்காய் எண்ணெயில் போட்டுக் காய்ச்சினால் சகல புண்களுக்கும் போடலாம்.

## 40. கொம்பு ஒடிந்துபோனாலும், கழன்று போனாலும்.

அரை பலம் சீனக்காரத்தை 1 படி சுத்தமான குளிர்ந்த தண்ணீரில் போட்டு சுத்தமான பழைய வெள்ளை துணியை நனைத்து கொம்பில் சுற்றவும். ஈரம் உணராதபடி நனைத்துவந்தால் சலம் பிடியாது குணமாகும். சீழ்பிடித்தால் ஆறாதபுண்ணுக்குப் போடும்படி சொல்லப்பட்ட மருந்தைச் செய்து போடவும்.

### 41. வயிற்றில் இறந்த கன்று விழ.

இந்துப்பு, வேலிப்பருத்தி வேர், பெருங்காயம், காய்மண்டை எலும்புத்தூள், இவைகளில் வகைக்கு பலம் அரை கிடைக்கக்கூடிய மூன்று மருந்தை அல்லது இரண்டை அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும்.

### 42. இளங்கொடியை மாடு தின்றாலும், இளங்கொடி விழாதிருந்தாலும்.

உடல் வெதும்பும், தூங்கிவிழும், இரை நன்றாய்த் தின்னாது, மெலியும், பால் வற்றும்.

விஷமூங்கில் இலை பலம் 1, எள்ளுச்செடி பலம் 5, பிரண்டைக்கொழுந்து பலம் 1, கருப்புக்கட்டி பலம் 5, தினையரிசிமாவு படி அரை, பேய்க்குமட்டி இலைச்சாறு ப்படி அரை, தேங்காய் 1, முடக்கொத்தான்செடி பலம் 3, இவைகளில் கிடைக்கிற மூன்று மருந்தைச் சேர்த்து குமட்டி இலைச்சாற்றில் அல்லது பசுவின்மோரில் கலக்கிக் கொடுக்கவும்.

### 43. முடைசாய்ந்தால்.

அரைப்படி எள்ளை 3 பலம் எள்ளுச்செடியோடு அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். அல்லது 1 படி இளநீரில் 2 ரூபாயிடை நயமான சந்தன அத்தரை கலக்கிக்கொடுக்கவும். அல்லது அரை படி பச்சரிசியும், 2 தேங்காயும் திருகிப்போட்டுக் கொடுக்கவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும்.

### 44. எருதுக்கடங்காமல் சினையாகாதிருக்கிற பசுவுக்கு.

மஞ்சள் பலம் 3, உப்பு படி அரைக்கால், கிலுகிலுப்பை பலம் 3, இவைகளை அரைத்து வெந்நீரில்

கலக்கிக்கொடுக்கவும். 1 சாமத்துக்குமேல் தண்ணீர் காட்டவும்.

## 45. மாட்டுக்கு சுகபேதிக்கு.

விளக்கெண்ணெய் படி கால், நிலவாகை வேர், கடுக்காய் பூ, களிப்பாக்கு, பூவரசம் விதை, இவைகள் வகைக்கு பலம் முக்கால் அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். எந்த மருந்தையாவது பேதிக்குக்கொடுத்தபோது பேதி நில்லாமல் அதிகப்பட்டால் 1 பலம் வசம்பை ஒட்டில் போட்டு கருக்கி 1 படி தண்ணீர்விட்டு வேகவைத்து அரைப்படி தண்ணீராக்கி இறுத்துக்கொடுக்கவும்.

## 46. மாடுகளுக்குப் புரை ஏறுதலாவது—சுவாசுக்குழாயில் தண்ணீர் போனதே.

மாட்டை உடனே நன்றாய்த் தவிக்கவிரட்டி பெருமூச்செடுக்கும்படி செய்யவேண்டும். அப்போது சுவாசக்குழாயில் போன தண்ணீர் வெளியேறிவிடும்.

## 47. அடித்து ஓட்டினும் நகராமல் விழுந்து கிடக்கும்.

புளியம்பட்டை, வசம்பு வகைக்கு பலம் 1, ஈருள்ளி பலம் 10 காடிவிட்டரைத்துக் கொடுக்கவும்.

## 48. உழவில் உடல் மேலிந்தாலும், தகை பிடித்தாலும், தேறுதமாட்டுக்கு கோம் மட்டிக்காயூறுகாய்.

50 பேய்க்குமட்டிக்காய்க்கு:—மஞ்சள், வசம்பு, வாய் விளங்கம், வெட்பாலையரிசி வகைக்கு பலம் அரை, மிளகு, மிளகாய்வற்றல், வெள்ளைப்பூடு, வெந்தயம், கடுகு வகைக்குப் பலம் 3, கருஞ்சீரகம், காட்டுச்சீரகம், நருக்குமூலம்

வகைக்கு பலம் 1, இந்துப்பு பலம் 5, கறியுப்பு படி 2, இவைகளை இடித்து காய்களை 4 பிளப்பாக அறுத்து மசாலையைச் செலுத்தி பானையில் வைத்து சீலைமண்சுற்றி தண்ணீர் விழாத இடத்தில் பூமிக்குள் புதைத்து 31-ம் நாள் எடுத்து மாடு ஒன்றுக்கு நாள் ஒன்றுக்கு 1 காய் வீதம் காலைதோறும் 1 வாரம் கொடுக்கவும். இப்படிச் செய்தால் நன்றாய் இரை தின்று தண்ணீர் குடித்துத் தெளியும். மருந்துகொடுக்கும் காலத்தில் மாடு வேலைக்குப் போகப்படாது. வேலைக்கு வேகம்கொடுக்கும்.

## 49. வேலையில் கள்ளத்தனம் செய்கிற மாட்டுக்கு.

4-ம் நிர். குட்டை கழுத்தில் மணிமாலைபோல் போட்டு மூத்திதருக்கன் என்ற நிலக்கடம்புச்செடியை கசக்கி நாசியிலும் செவியிலும் பிழியவும். அவசியமானால் மூன்று தடவை செய்யவும். வேலையில் படுத்த நிமிஷத்தில் செய்யக்கூடுமானால் அதிக நல்லது.

## 50. கன்று கொள்ளாதிருந்தால்.

3 பலம் தாளி இலையை அரைத்து கால்படி நல்லெண்ணெயில் கலக்கி பசுவுக்குக் கொடுத்து வேலிப்பருத்தி, கீழ்காய்நெல்லி இலைகள் வகைக்கு பலம் 2, அரைத்து பசுவின் முதுகிலும் கன்றின் முதுகிலும் தேய்த்து விடவும். அவசியமானால் மூன்று நாள் காலை மாலை தேய்க்கவும்.

## 51. பாலில்லாதிருந்தால்.

வீழி இலை பலம் 10 அரைத்து, 1 படி பாலில் கலக்கிக்கொடுத்து 2-மணி நேரத்துக்கு அப்புறம் தண்ணீர் காட்டவும். மூன்று நாள் கொடுக்கவும். நன்றாய் இரை தின்று தண்ணீர் குடிக்கும், பால் அதிகப்படும்.

52. மாடுகளுக்கு உன்னிபற்றினுலும் வங்கு விழுந்தாலும்.

கர்பாலிக் ஆசிட் (Corbolic Acid) 1 பங்கும், 15 பங்கு நல்லெண்ணெயும் கலந்து தேய்க்கவும். அல்லது நொச்சி இலை, வசம்பு வகைக்கு பலம் 1, தித்தம் கால்பலம், நயம் புகையிலை அரை பலம், இவைகளை அரைத்து நல்லெண்ணெயில் குழப்பிப் பூசவும். உன்னி உதிரும், வங்கு போம், (எண்ணெய் சேராத கர்பாலிக் ஆசிட் கையில் பட்டால் கைவெந்துபோம்).

53. தீப்பட்ட மாட்டிற்கு.

அரைப்படி சுண்ணாம்பை நீற்றி 4 படி தண்ணீர் விட்டுகலக்கி தெளிந்த தண்ணீரில் 2 படி எடுத்து அதில் கால் படி தேங்காய் எண்ணெயை விட்டு (கலக்கி) சிலுப்பி வருகிற வெண்ணெயை எடுத்து டப்பாவில் வைத்துக்கொண்டு போட சுகமாகும்.

54. குன்னி நிற்கும் அல்லது குன்னி முக்கை பூமியில் குத்தி கீழே விழும்.

6 பெரிய கருங்கண் தேங்காய்ப்பாலும், கால்படி நல்லெண்ணெயும், மூக்கரைச்சாரணை வேர் 3 பலமும் அரைத்துக் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் நம்பர் சூட்டை இடது விலாவில் போடவும்.

55. மாட்டின் முலைக்காம்பு வீங்கி, வெதும்பி, பால் இறங்காமல் இருந்தால்.

கால்பல நவச்சாரத்தை அரைப்படி தண்ணீரில்போட்டு கரைத்து துணியில் நனைத்து அந்த காம்பில் கட்டிவைத்து காயாமல் அந்த தண்ணீரால் இரண்டு மூன்று நாள் நனைத்து வந்தால்அந்த காம்பு பால்சுரந்து குணமாகும்.

-19-



56. பால் இரத்தமாய் இறங்கினல்.

3 பலம் சுக்கை ஒன்றரைப்படி தண்ணீரில் தட்டிப் போட்டு கஷாயம் இறக்கிக் கொடுக்க தன் நிறம் வந்து கறக்கும்.

57. மாட்டுக்கு செருமல் கண்டு மூக்கில் உதப்பி சாய்ந்தால்.

3 பலம் மிளகும், 5 பலம் வெற்றிலேயும் அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி மூனறு நாள் கொடுக்கவும்.

58. அதிகமாய் நீர் விட்டு நாளுக்குநாள் மேலியும், தீவனம் நன்ருய் தின்னு திருந்தால்.

மிளகு, திப்பிலி வகைக்குப் பலம் 1, கற்ருழஞ் சோறு படி ஒன்றரை, வெங்காயம் பலம் 10, இவைகளே அரைத்து காடித்தண்ணீரில் கலக்கி புகட்டத் தீரும். மூன்று நாள் மருந்து கொடுக்கவும். இடதுவிலாவில். 3-ம் நிர். சூடு போடவும்.

59. நஞ்சுவைத்த குறி.

தீவனந்தின்னுது, மாடு புல்லரிக்கும், வயிற்றுவலி யினல் மாடு படுக்கும், எழுந்திருக்கும், காலாலும் கொம் பாலும் வயிற்றில் அடிக்கும், வாயில்நீர்வடியும், விலாவைத் திரும்பிப்பார்க்கும், தாகத்தினல் அடிக்கடி தண்ணீர் குடிக்கும், வயிறூதும், துடிதுடித்து வருத்தப்படும், சாணி அடிக்கடி போடும், பின்பு கழிச்சல்கண்டு இரத்தம் சீதம் விழும்.

20 கோழிமுட்டை வெள்ளைக்கருவும், மிளகு பலம் 3, காசுக்கட்டி பலம் 1, நீலத்துத்தம் பலம் கால், வெற்றிலே,

சிறுகீரை வேர் வகைக்கு பலம் 2, இடித்து காடித் தண்ணீரில் பிசைந்து கவளங்கொடுக்கவும். பூரணசுகம் கிடைக்கிறவரையில் புளித்த கம்பங்கஞ்சிகொடுக்கவும்.

60. கன்றுக்கு வயிற்றழைச்சல் கண்டாலும் மாந்தத்தினல் வயிறு கழிந்தாலும்.

அரைவீசம்படி அல்லது கால்வீசம்படி பச்சைக்கடலையை ஊறப்போட்டு நன்ருய் அரைத்து காடித்தண்ணீரில் கலக்கி புகட்டத் தீரும்.

61. மாடு ஈன்றகாலத்தில் உறுப்புத் தள்ளினல்.

ஒருபலச் சினக்காரத்தை இரண்டரைப்படி குளிர்ந்த தண்ணீரில் போட்டு, அத் தண்ணீரால் கழுவி உள்ளே தள்ளிவைத்தால் நின்றுகொள்ளும். அல்லது ஐஸ்கட்டியைக்கொண்டு வந்து உறுப்புததள்ளின பாகத்தில் ஒத்தி ஒத்தி வைத்து எடுத்து உள்ளே தள்ளினுலும், நின்றுகொள்ளும்.

62. மேல்மூச்செடுக்கும், நடுங்கும், புல்லரிக்கும், சிறு செருமலாய்ச் செருமும், ஒரு காலே நோண்டும். இதை புல்மரி என்று சொல்லுவார்கள். குந்து என்றும் சொல்லுவாாகள்.

எருக்கலம்பாலே மாட்டின் நீர்த்தாரையில் இரண்டு மூன்று சொட்டு வைத்தால் 2 அல்லது 3 மணிக்குள் சுகமாகும்.

# II. தலை.

## 1. தலையை கீழேவைத்துக்கொண்டு நிற்கும்.

*அரையரைக்கால் படி காணத்தை திரித்து சிறுநீரில் கலக்கிக்கொடுக்கவும். மூன்றுநாள் கொடுக்கவும். 3-ம் நிர். சூட்டை இடதுவிலாவிலும் 7-ம் நிர். சூட்டை அடிவயிற்றிலும் போடவும்.*

*அல்லது கர்ப்பூரவல்லிச்சாறு படி 1, நல்லெண்ணெய் படி கால், ஒன்றாய்க் கலந்து புகட்டவும். மேற்கண்ட சூடும் போடவேண்டும்.*

*அல்லது, 6 கருங்கண் தேங்காய் திருகி எடுத்த பாலும், அரைப்படி கொள்ளு என்ற காணத்தை திரித்த மாவும் சேர்த்துக்கொடுக்கவும்.*

## 2. தலையை எடுத்துப்பார்க்கும், கண்ணையுருட்டி கடைக்கண்ணால் பார்க்கும், இரண்டுநாள் சென்றால் வயிறூதி விழுந்து கிடக்கும்.

*கண்டங்கத்தரி சமூலம் இடித்து சாறு படி அரை, எலுமிச்சம்பழச்சாறு படி அரை, வெள்ளைப்பூடு பலம் 1 அரைத்து இச் சாறுகளும் சேர்த்து கலக்கிக்கொடுக்கவும். இம் மருந்தில் கொஞ்சம் வடிகட்டி கண், நாசி, செவிகளில் விடவும். 3-ம் நிம்பர் சூட்டை இடதுவிலாவில் போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.*

## 3. தலையை எடுத்துப் பார்க்கும், இரண்டு நாசியிலும் சளி வெள்ளையாய் உறைந்திருக்கும், நாக்குத் தடித்திருக்கும், தீவனந் தின்னாமல் மெலிந்துபோம்.

ஆவாரம்பட்டை, இலந்தைப்பட்டை வகைக்கு பலம் 1 அரைத்து, அத்திக்காய் படி 1 இடித்து, 2 படி காடித் தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். செடி சாற்றை வடி கட்டி நசியமிடவும். 3-ம் நிம்பர் சூட்டை இடதுவிலா விலும் 8-ம் நிம்பர் சூட்டை நெற்றியிலும் போடவும்.

4. தலை கவிழ்ந்து புத்திமயங்கி தீவனந் தின்னமல் நிற்கும்.

2 பலம் கரியபோளத்தை வெந்நீரில் கலக்கி இறுத்துக்கொடுத்து, 2 மணிக்குப்பின் 1 தடவைக்கு 2 படி வெந்நீர் வீதம் அரை மணிக்கு 1 தடவையாக, மூன்று நாலு தடவை கொடுக்க பேதியாகும். சாணியைக் கரைத்து வெதுப்பவைத்து தேகமெல்லாம் வேதுபூசவும்.

5. தலையை நீட்டி அதை தாங்கிக்கொள்ள இடம் பார்க்கும், கலங்கிக் கிட்டவருகிற மாடுகளை, மனிதரை முட்டவரும், கதறி காலினலும் கொம்பினலும் பூமியை கிளரும்.

இதற்கு 4-ம் நம்பரில் சொல்லியபடி பேதிக்குக்கொடு.

6. தலையை கீழேவைத்துக்கொண்டு நிற்கும், கண்ணில் பீளைசாடும், தூங்கும், தண்ணி நிற்கும், தொண்டையை அடைத்து திகரப்படும், கரட்டுக் கரட்டு என்று நாக்கை நீட்டி இளைக்கும், வயிறூதும்.

சுக்கு, மிளகு, திப்பிலி, அமுக்கிராகிழங்கு, வெள்ளைப் பூடு, ஓமம், கருஞ்சீரகம் வகைக்கு பலம் 1, வசம்பு, வெளிச்சிப்பிசின் வகைக்கு பலம் கால், நொச்சிவேளை, பேய்பீர்க்கஇலை வகைக்கு பலம் 5, கற்றாழஞ்சோறு படி அரை,

ங-



பசுவின் வெண்ணெய் படி கால். இவைகளில் 6 மருந்தும் வெண்ணெயும் சேர்த்துக்கொடுக்கவும்.

7. தலை வீங்கும், வயிறூதும், கழியும்.

வீழி இலை, வெப்பூலாத்தி இலை வகைக்கு பலம் 5, கருவேலா இலை பலம் 3, அரைத்து 1 படி எருமை மோரில் கலக்கிக் கொடுக்கவும். 3-ம் கிர். சூட்டை இடது விலாவில் போடவும்.

8. தலையைக் கட்டுத்தறியில் இடித்துக்கொள்ளும், தேய்க்கும்.

வேலிப்பருத்தி இலைச்சாற்றில் சுண்ணும்பைக் குழைத்து நெற்றியில் பூசி உணர குணமாகும் அல்லது காய்ப் பூவரசு விதை பலம் அரை சேர்த்து அரைத்து வெண்ணெயில் குழப்பி நெற்றியில் பூசவும்.

9. தலைகுனிந்து நிற்கும், துரிதமாய் மூச்சுவிடும், செருமும், சோம்பலாய் நிற்கும், நாசியிலும் கண்களிலும் தண்ணீர் வடியும்.

கச்சக்காய் அரை ரூபாயிடை, கடுகுரோகணி 1-ரூபாயிடை, மிளகு பலம் 3, இஞ்சி பலம் அரை, வெற்றிலை பலம் 5, இவைகளை இடித்து கவளம் கொடுக்கவும்.

10. கொம்புக்குள் நோய்சாடி, கொம்பு சாய்ந்துபோகும்.

இந்த வியாதியை சுகப்படுத்த இங்கிலீஷ் மாட்டு வைத்திய ஆஸ்பத்திரியிலுள்ளவர்கள் முடியாது என்கிறார்கள். நானும் அப்படியே அபிப்பிராயப்படுகிறேன். இந்த விஷயத்தில் பிரயாசம் எடுத்தும் ஒன்றுவது திருப்தியாய் சுகப்படவில்லை.

# III. கால்.

## 1. நாலு காலும் நடுங்கும்.

இதற்கு 4 கால்களிலும், முழங்காலிலும் 1-ம் 2-ம் நீர். சூடுகளை படத்தில் காட்டிய அந்தந்த இடங்களில் போடவும்.

## 2. நாலு காலும் நடுங்கி வாயில் நீர் வடியும்.

3பலம் திம்பை இலையை அரைதது கால்படி நல் லெண்ணெயில் கலந்து கொடுக்கவும்.

## 3. எரிகால் நோய், நாலு காலையும் உதறிக் கொண்டு நிற்கும், எறியும், செவிதாழும், இரத்தம் விழும், உடம்பெங்கும் குஷ் டம்போல் விழுந்திருக்கும்.

ஆவாம் வேர்பட்டை பலம் 3, கடுக்காய் பூ பலம் 1, இவைகளை அரைத்து சாடித்தண்ணீரில் கலக்கி புகட்டவும். கர்பாலிக் ஆசிட் 1 பங்கும் 15 பங்கு நல்லெண்ணெயும் சேர்த்து குஷ்டம்போல் இருக்கிற இடங்களில் போடவும். இந்த மருந்தை உன்னி பற்றின மாட்டுக்குப் போட்டால் உன்னி உதிர்ந்துபோம். அல்லது, 2 ரூபாய் இடை சித்தரத்தையை அரைத்து அரைப்படி பாலில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். வியாதி முற்றினல் வலிப்புத்தோன்றும். கரிப்பான்சாறு படி அரை, நல்லெண்ணெய் படி கால், அனாக்கால்படி கருங்காணத்தையும் அரைத்துச்சேர்த்துக் கொடுக்கவும். காணமும் எள்ளுப்பிண்ணக்கும் ஆட்டி காடித்தண்ணீரில் கலக்கி தண்ணீர் காட்டவும்.

4. ஒரு காலைத் தூக்கிக்கொண்டு நிற்கும், இரை தின்னாது, செவிதாழும் அல்லது முன்னங்கால் இரண்டையும் ஏந்திவைக்கும், நாசியில் நீர்வடியும், தீவனம் தின்னாது, அசைபோடாது.

இலுப்பைப் பிண்ணாக்கு, மதுக்காரை வேர், புனமுருங்கைவேர் பட்டை வகைக்கு பலம் 2, இவைகளை அரைத்து கால்படி சாராயத்தில் கலக்கி புகட்டவும். இரு விலாவிலும் 3-ம் நிம்பர் சூட்டைப்போடவும். தைவேளை, வேப்பங்கொழுந்தும் வகைக்கு 3 பலம் அரைத்து நல லெண்ணெயில குழைத்துக் கொடுக்கலாம்.

5. காலைத்தூக்கி நிற்கும், வலிப்புத்தோன்றும், வாயில் நீர் வடியும், இரை தின்னாது, இளகலாய் சாணம் போடும்.

பொன்முசுட்டை சமூலம் 12 பலம் இடித்து பசுவின்பால் விட்டுப் பிசைந்து அரைப்படி சாறு எடுத்துக் கொடுக்கவும். இடதுவிலாவில் 3-ம் நிர். சூடுபோடவும்.

6. பின்னங்கால் வீங்கும்.

மாவிலங்குவேர்பட்டை, குட்டிவிளாவேர் பட்டை வகைக்கு பலம் 2. இரண்டையும் நன்றாய் அரைத்து, கால்படி விளக்கெண்ணெயில் குழப்பி உள்ளுக்குக்கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூடுபோடவும்.

7. பின்னங்கால் தொடை வீங்கும், மயிர் சிலிர்க்கும்.

சோழியவணாச் சாறு அரைப்படி இலுப்பைப் பிண்ணாக்கு பலம் 1, அரைத்து ஷை சாற்றில் கலக்கிக்கொடுக்

கவும். வீக்கத்தில் 8-ம் கூ சுடுபோடவும். ஷை மருந்தை 3 நாள் கொடுக்கவும்.

8. நாலு காலையும் மடக்கி விழுந்து படுக்கும்.

கர்பூரவல்லிச்சாறு படி அரை, திப்பிலி ஓமம் வகைக்கு பலம் 1, மிளகு பலம் 3, வெள்ளெருக்கங் கொழுந்து பலம் 1, இவைகளில் கிடைக்கக்கூடிய 4 மருந்தை அரைத்து 1 படி காடித்தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும்.

9. காலில் கோழு பாஞ்சதற்கு.

கொழுப்பாஞ்சபுண்ணை நன்றாய் கழுவித்துடைத்து டிஞ்சர் அயோடியனைப்போட்டால் குணமாகும். அல்லது கால் பலம் சூடத்தை வீசம்படி வேப்பெண்ணெயில் போட்டு காய்ச்சிப்போடவும். புழுவைத்தாலும்கூட ஷை மருந்துகள் சரிசெய்து போடும்.

10. காலில் குளம்பு வளர்ந்தாலும், மோளிகள் வீக்கம்கண்டு மாடுதவிழ்ந்தாலும் தேகமேங்கும் கழலை வெடித்தாலும்.

(இதைத்தான் தவளை நோய் என்று சொல்லப்படுகிறது.)

கழுதை மண்டையோடு பலம் 1, கால்படி வேப்பெண்ணெயில், 2 செவ்வால் அரணையைப் போட்டு காய்ச்சி நுரை அமர்ந்தபின் இறக்கி ஆறவைத்து அரணைகளை எடுத்துப்போட்டு ஷை எண்ணெயும் சுடலாவரை இலை தனிச்சாறு படி கால், ஷை எலும்புத்தூளையும் மற்ற மருந்துகளுடன் கலந்து கொடுக்கவும். குடிக்க வெந்நீர்விடவும். நிச்சயமாய் சுகமாகும். அல்லது மாவிலிங்கு இலை, சுடலாவரை, தைவேளை, குப்பைமேனி, சிறுதும்பை

வகைக்கு பலம் 5. மிளகு, வெள்ளைப்பூடு வகைக்கு பலம் 1, இவைகளை அரைத்து கவளங் கொடுக்கவும்.

11. கால் வலியினால் எழுந்திருக்கமாட்டாது, வயிறூதும், மயிர் சிலிர்க்கும், தலையை கீழேபோட்டு நிற்கும், நடக்கமாட்டாது.

இதற்கும் மேலே இருக்கிற 10-ம் நிம்பர் மருந்தைப் போடவும்.

12. முன்னங்கால் இரண்டையும் தேத்திநடக்கும், நெஞ்சை இடுக்கி நடக்கும்.

பொதுக்குறிப்பில் சரல்முட்டி நோய்க்குச் சொல்லிய பக்குவத்தைச் செய்யவும். (18-ம் நிம்பர்.)

13. ஒரு பின்னங்கால்நொண்டும், அந்தக்கால் சிறு குளம்படியில் தொட்டுப் பார்த்தால் சுடும், முகம் களைப்பாகக் காணப்படும்.

நல்லெண்ணெயும், எருக்கலம்பாலும் சமன் கலந்து முழங்காலுக்குமேல் குத்திச் செலுத்தவும். அல்லது சுக்கு, மிளகு வகைக்கு பலம் 1, திப்பிலி பலம் அரை, வசம்பு பலம் கால், தைவேளை, குப்பைமேனி வேர் வகைக்கு பலம் அரை, வேப்பெண்ணெய் படி காலில் இரண்டு செவ்வால் அரணையை போட்டுக்காய்ச்சி, எடுத்துப்போட்டு மேற்படி மருந்துகளை அரைத்துப்போட்டுக் குழப்பிக் கொடுக்கவும். வெந்நீர் சேர்த்துக் கலக்கிக் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

14. படுத்த படுக்கையில் காலை உதையும், சாணிபோடும்.

நெய் படி கால், பசுவின் பால் படி 1, நாய்ப்பாகல் இலை பலம் 3, மூன்றையும் சேர்த்துக் கொடுக்கவும். நெஞ்சில் 8-ம் நிம்பர் சூட்டைப் போடவும்.

15. கால்மடியாமல் விழுந்துகிடக்கும், 9மணி நேரத்திற்குப்பின் வாயிலே நுரை தள்ளும், தண்ணீர்வடியும், கண் குழிவிழும், கண் சிவந்து அரைக்கண் பார்வையாய் பார்க்கும், காது தொங்கும், இரை தின்னாது, சவ்வுபோல் சாணி போடும்.

வெள்ளைப்பூடு, கார்கோலரிசி வகைக்கு பலம் 2, கடுக்காய், சிறுதும்பை, குப்பைமேனி, லகயாந்தகரை வகைக்கு பலம் 1, வேப்பஇலை பலம் 10, இடித்து 1படி வெந்நீர்விட்டு பிசைந்து சாறு எடுத்து மற்ற மருந்துகளையும் அரைத்து கலக்கி புகட்டவும். இப்படி 3 நாளைக்குக் கொடுக்கவும். காலில் முதலாம் நிம்பர் சூடும் குரல்வளையில் 8-ம் நிம்பர் சூடும் போடவும்.

16. காலை இழுத்து வைக்கும், வாயில் நீர்வடியும், தேகம் குலுங்க வலிப்புக்காணும்.

கால்படி வேப்பெண்ணெயில் கொன்றை இலை, குன்னிமுத்துச்செடி, வகைக்கு பலம் 3, அரைத்துக் குழப்பிக் கொடுக்கவும். அவசியமானால் வெந்நீர் சேர்க்கவும். இடது விலாவில் 3-ம் நிம்பர் சூடும் குடிக்க வெந்நீர் விடவும்.

-24-



17. நாலு காலையும் உதறும், மூன்று நாள் கழியும், நாலாம் நாள் இரத்தம்விழும், சரீரம் எல்லாம் குஷ்டம்போல் விழும்.

கடுக்காய், ஆவாரம்பட்டை வகைக்கு பலம் 1, இலந்தை இலை பலம் 2, அரைத்து 1 படி காடித்தண்ணீரில் கலக்கி புகட்டவும். அல்லது, சுடலாவரை இலை பலம் 5, கோஷ்டம் பலம் 1 இவைகளை அரைத்து, 1 படி காடித் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

18. நாலுகாலும் நடைகூடாது, மயிர் சிலிர்க்கும், அல்லது கண்ணில் பீளை சாடும்.

வெங்காயம் பலம் 10 சுக்கு கடுக்காய்வகைக்கு பலம் 3 இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். 3-ம் நீ. சூட்டை இருவிலாவிலும் போடவும், வேப்பங் கொழுந்தும் வசம்பும் அரைத்து 4 காலிலும் பூசவும். கண்ணைப்பற்றிய அத்தியாயத்திலும் இந்தமாதிரியுண்டு. பார்க்கவும்.

19. நாலுகாலும் நடுங்கும், கண்சிவந்திருக்கும், வாயிலே நீர்வடியும், வாயைத் திறந்து நாவைப் புரட்டிப் பார்த்தால் இரண்டு நரம்பு நீல நிறமாய் ஓடும்.

ஊசியைக்கொண்டு ஷெ நரம்புகளை குத்தி நசுக்கி இரத்தத்தை வெளியாக்கி உப்பும் புளியும் அல்லது சீனக்காரதூளை அதில் தேய்க்கவும்.

20. காலைத் தட்டிக்கொண்டு நிற்கும், மனிதரை பாயும், நன்றாய் இரை தின்னாமல் மெலியும்.

2-பலம் கரியபோளத்தை வெந்நீரில் கரைத்து இருத்துக்கொடுக்கவும். பேதி போகும்படி வெந்நீர்கொடுக்க வேண்டும். அல்லது அரைப்படி விளக்கெண்ணெயை பேதிக்குக்கொடுத்து 2 மணிக்கு அப்புறம் அரைமணிக்கு ஒரு தடவை 2 படி வெந்நீர் கொடுக்கவும். நன்றாய் பேதி போனபின்பு நாயுருவி சமூலம் பலம் 5 வெள்ளைப் பூடு பலம் 1, வசம்பு பலம் அரை, இவைகளை அரைத்து 1 படி மோர் அல்லது சிறு நீரில் கொடுக்கவும்.

21. காலால் தலையில் சோறியும், காதுவீங்கும், காது கேளாது, காதிலிருந்து இரத்தம் வரும்.

திப்பிலி, அமுக்கிரா வேர் வகைக்கு பலம் 1, சுக்கு 2 பலம், மிளகு 3 பலம், வசம்பு, பெருங்காயம் வகைக்கு பலம் கால், அரைத்து காலேயரைக்கால் படி சாராயத்தில் கலக்கிக் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும். காதைச் சுற்றி சூடுபோடவும். செவியைப்பற்றிய குறிப்பிலும் பார்க்கவும்.

22. நாலு காலையும் தெத்திவைத்து நடக்கும், தலைதுலுங்கும், முகத்தை தன் சரீரத்தில் அடித்துத் தேய்க்கும், மூக்கை நக்கிக் கொண்டு நிற்கும்.

சுக்கு, வெள்ளைப்பூடு வகைக்கு பலம் 1, கொத்தமல்லி, கருஞ்சீரசம் வகைக்கு பலம் 2, சனி நாயிறு பலம் அரை, வசம்பு பலம் கால் புனமுருங்கை, தும்பை, வகைக்கு பலம் 5, இடித்து, 1 படி சாறு பிழிந்து வெந்நீரும் கலந்து கொடுக்கவும். 3-ம் கூ. சூட்டை இரு விலாவிலும் போடவும்.

-25-



23. நாலுகாலும் நடுங்கும், கண்விழியை சொருக விழிக்கும், தீவனந் தின்னுது, வயிறு இரையும்.

நீர்பூலாத்திவேர் பலம் 3 அரைத்து 1 படி காடித் தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் கூ சூட்டை இரு விலாவிலும் போடவும்.

24. காலே நீட்டிக்கொண்டு கிடக்கும், நாடியை பூமியில் வைத்துக்கொள்ளும், காலேயில் முதுகை நெளித்து நிமிர்ந்துவிழும்.

1 படி கருங்காணத்தை நனைத்து நன்ருய் ஆட்டி 3 பலம் குன்னிமுத்துச்செடியையும் நன்ருய் அரைத்து எருமை மோரில் கலக்கிக்கொடுக்கவும். இருவிலாவிலும் 3-ம் கூ சூடும் நடுமுதுகில் 7-ம் கூ சூடும் போடவேண்டும்.

25. நாலு காலேயும் பொத்திப் பொத்தி வைக்கும், அலேந்துகொண்டு நிற்கும்.

முருங்கை இலே, வெங்காயம் வகைக்கு பலம் 10, சன்ன லவங்கப்பட்டை பலம் 3, இவைகளே அரைத்து 3 படி காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். 3-ம் கூ சூட்டை இருவிலாவிலும்போட.

26. நாலுகாலும் நடுங்கும், வயிறு வீங்கும், வாயில் நீர் வடியும்.

வேலிப்பருத்தி இலே பலம் 10 அரைத்து கால்படி நல்லெண்ணெயும் சேர்த்துக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். 3-ம் கூ சூட்டை இருபக்கமும் வயிற்றைக் கட்டிப்போடவும். குடிக்க வெந்நீர் விடவும்.

27. கால்வழங்காமல் கிடந்தகிடையில் சாணம் போடாமலிருக்கும், போட்டால் பிழுக்கையாயிருக்கும்; நீர் விடும், தீவனம் தின்னுது.

சுக்கு, வெள்ளைப்பூடு, திப்பிலி வகைக்கு பலம் 1, தூதுவளை பலம் . இவைகளை அரைத்து 2 படி காடியில் கலக்கிக்கொடுக்கவும்.

28. மோளிகளில் வீங்கியிருக்கும்.

வேது வாதமடக்கி, கொளுஞ்சி, ஆடாதோடை, மஞ்சணத்தி, பேய்துமட்டி இலைகள், கள்ளிப்பழுப்பு, எருக்கலம் பழுப்பு, ஊமத்தை, குப்பமேனி, வேலிப் பருத்தி, குன்றிமுத்து, பெருந்தும்பை, முடக்கொத்தான் இலைகளில் கிடைக்கக்கூடியவைகளை வகைசகு 3 பலம் சேர்த்து 6 படி தண்ணீரில வேகவைத்து இளவெதும்ப லாக இருக்கிற தண்ணீரை வேது விடவும். ஷ சக்கையை துணியில் பொட்டணம் கட்டிக்கொண்டு ஒத்தணம் கொடுக்கவும் 1 கீ. சூட்டை வீக்கங்களில் போடவும். அதிக சூடான தண்ணீரை உபயோகித்தால் முடி உதிர்ந்துபோம்.—கவனி.

29. கால் வாத நோய்களுக்கும் கால் நீர்க்கட்டுக்கும் பொதுக்குறிப்பு.

1. நாலுகாலும் நடை கூடாமலிருக்கும்.
2. படுத்தால் எழுந்திருக்கமாட்டாது, தலை கவிழ்ந்திருக்கும்.
3. நடக்கும்போது நாலுகாலும் தள்ளாடும்.

-26-



4. நாலு காலும் தாங்கி நடக்கும்.

5. கால் தடுமாறும், முன்னங்காலை மாற்றி வைக்கும், தலை கவிழ்ந்து நிற்கும், நன்றாய் தீவனம் தின்னாது.

6. கால்களில் வீக்கங்காணும், தொட்டுப் பார்த்தால் சுடும், வலியினால் தொடவிடாது, முதலாவது ஒரு காலில்கண்டு அப்புறம் மற்ற கால்களுக்கும் வரும், முதுகு இடுப்புகளில் இந்த வியாதியினால் வலியிருக்கும்.

7. பின்னங்கால் இரண்டும் இழுக்கும், நடக்க முடியாது, கண் சிவக்கும். இதுதான் சுண்டு வாதம்.

*மிளகு, மரல்கிழங்கு, வாதமடக்கி இலை, முடக்கொத்தான், ஆடாதோடை இலை வகைக்கு பலம் 1, நிலவேம்பு பலம் 2, அமுக்கிராவேர் பலம் 1 இவைகளை அரைத்து 2 படி வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். 28 நெ பக்குவத்தையும் அவசியமானால் உள்ளுக்கு கொடுக்கும்போது வேதும் விடுகிறது நயம்.*

30. முன்னங்கால்மட்டும் நொண்டினால் இதை சுளுக்குநோய் என்று சொல்லப்படும், இந்த நோய் பலமான பாரவண்டி

யின் இழுவையினாலும், சகதிக்குள் செய்கிற வேலையினாலும் சம்பவிக்கிறதுண்டு.

ஆடாதோடை இலை பலம் 2, ஆமணக்குமுத்துபடி அரைக்கால், வெள்ளைப்பூடு பலம் 1, அரைப்படி. தயிரைத் துணியில் கட்டித்தூக்கி தண்ணீர் வடிந்தபின் இருக்கும் வெள்ளையையும் சேர்த்து அரைத்து சிறுகுளம்பிலிருந்து திமில் வரையும் பூசவும். காலையில் பூசி மாலையில் பழையபடி மருந்தைச் செய்துவைத்துக்கொண்டு இளவெந்நீர் விட்டுக்கழுவி துணியினால் துடைத்து ஈரம் உலருமுன் பழையபடி ஆயத்தம் செய்துவைத்திருந்த மருந்தைப்பூசவும். இப்படி 3 நாள் 6 தடவை செய்யவும். மாடு வேலைக்குப் போகப்படாது, கூட 3 நாள் இளைப்பாற இடங்கொடுப்பது உசிதம்.

## 31. கால் எந்த பாகம் ஒடிந்தாலும்.

அந்த இடத்தின் வசதிக்குத் தகுந்தபடி மூங்கில்தப்பை செதுக்கி 3 அல்லது 4 தப்பையை அணைத்து காலில் அழுத்தாதபடி முதலில் துணியைச் சுற்றிக்கொண்டு தப்பையை அணைத்து உளுந்தப்பருப்பை நன்றாய் அரைத்து முட்டையின் வெள்ளைக்கருவைவிட்டு பிசைந்து நீளத் துணியில் பூசி சுற்றி அசையாமல் கட்டவும். 3 தடவை காலில் சுற்றி இருக்கிற துணியில் பசைதேய்த்துக் கட்டவும். மாடு கட்டை உழற்றி விடாதபடி இருந்தால்மட்டும் கூடும்.

## 32. பின்னங்காலை தூக்கிநிற்கும், வாயில் நுரைதள்ளும், இளஞ்சாணிபோடும், 6-மணி நேரத்திற்குப்பின் சில சமயம் வலிப்புக்காணும், இதைத்தான் புல்லுமாரி என்று சொல்லுகிறது.

வெப்பூலாத்திவேர் பலம் 5, பேய்முசுட்டைக் கீரை பலம் 10, வேப்பம் பூ பலம் 3, அரைத்து 2 படி பாலில் கலக்கிக்கொடுக்கவும்.

## 33. காலில் மோளி இறங்கிப்போனல்.

மொளி இறங்கின காலில் குளம்புக்குமேல் கயிற்றைக்கட்டி பின்னுல் இழுத்துப் பிடித்துக்கொண்டு தடியினுல் கயிற்றை அடிக்கவும் மொளி கிண்ணியில் கடக்கென்று விழும்.

# IV. கண்.

## 1. கண் சிவந்து கண்ணில் பீளைசாடும், தண்ணீர்வடியும், மயிர் சிலிர்த்து உடம்பில்கோப்பளங்காணும், நாக்கில் காசு போல்தடித்து தலையை சுப்புறபோட்டு நிற்கும்.

3 படி இளனித்தண்ணீரும், 3 பலம் நாயுருவி இலையும், மலைவாழைப்பழம் 25, 5 பலம் சர்க்கரையும் கலக்கி புகட்டவும். அல்லது கர்பூரவல்லி இலை பலம் 3, குழி தாமரை இலை பலம் 3, சோற்றுக்கத்தாழஞ்சோறு படி அரை, சீரகம், அதிமதுரம், ஏலம் வகைக்கு பலம் 1, வெங்காயம் பலம் 5, பழம்புளி பலம் 3, காடித்தண்ணீரில் அரைத்து கொடுக்கத் தீரும். அல்லது

1 படி எள்ளை ஒன்றேகால்படி தண்ணீரில் போட்டு பிசைந்து எடுத்த தண்ணீர் ஒருபடி, பனங்கள்ளு ஒருபடி நாவல் கொழுந்து பலம் 5, இளுவைக்கொழுந்து பலம் இரண்டரை இவைகளை அரைத்து எள்ளுத்தண்ணீர் முதலியவைகளில் கலக்கிக்கொடுக்கவும்.

## 2. கண்ணில் பீளைசாடும், திகைத்துநிற்கும்.

நிலக்கடம்பு என்ற முத்தெருக்கன்செவி இலை பலம் 5, கருஞ்சீரகம் பலம் 1. இரண்டையும் காடித்தண்ணீரில் அரைத்து கலக்கிப் புகட்டவும். 3 நாள் புகட்டவும். அல்லது

வெற்றிலை பலம் 10, மிளகு பலம் 3, இரண்டையும் அரைத்து கால்படி வெந்நீரில் கலந்து புகட்டவும். அல்லது

விடத்தஇலை பலம் 3, வெண்ணெய் கால்படி கலந்து பசுவுக்கு எருமை மோரிலும், எருமைக்குப் பசுவின் மோரிலும் கலந்து கொடுக்கவும். ஒரு சாமத்துக்குமேல் வெந்நீர் காட்டவும்.

## 3. கண் குழிவிழுந்து கண்ணில் பீளைசாடும், மயிர் சிலிர்க்கும், செவிதாழும், இரை தின்னாது.

வீழி இலை பலம் 5, புளிய இலை பலம் 5, அல்லது இரண்டில் ஒரு இலையை 10 பலம் கொண்டுவந்து எருமை மோர் தெளித்து இடித்து பிழிந்தசாறு படி 1 புகட்டவும். 3 கூ சூட்டை இடது விலாவில் போடவும்.

## 4. கண் சிவந்திருக்கும், வாயை திறவாது.

வாயைப்பற்றிய வாகடத்தில் பார்க்கவும்.

## 5. கண் குழிவிழுந்திருக்கும், வாயில் நீர்வடியும்.

கண்ணைச்சுற்றி சூடுபோட்டு, நீர்க்கடம்புவேர் பட்டை பலம் 3, தயிர்படி 1, நெய்படி கால், விஷ்ணுகிராந்தி பலம் 2, மதுக்காரைவேர் பலம் 3, இவைகளில் 3 மருந்தை இரண்டுபடி காடியில் கலக்கி புகட்ட தீரும்.

6. கண்ணிலும் வாயிலும் நீர்வடியும் அல்லது மூக்கிலும் வாயிலும் இரத்தம் காணும்.

சீரகம் பலம் 3 அரைத்து எலுமிச்சம்பழச்சாறு படி கால், இளநீர்படி 1, புளித்த கம்பங்கஞ்சி 3 கை, புளித்த எருமைமோர் படி 1, எல்லாம் கலந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்க தீரும்.

7. கண்விழிகள் இரத்தமாயிருக்கும்.

5 பலம் துளசியை இடித்து சாறு படி அரை, மோர் படி 1, 3 பலம் புளியும் கரைத்துக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். தலையில் 6-ம் நிம்பர் சூடுபோட்டு, இடது விலாவில் 3-ம் நிம்பர் சூடு போடவும்.

8. இருகண்ணிலும் தண்ணீர்வடியும்.

விளக்கெண்ணெயை கொம்பிலும், கொம்புக்கிடையில் நெற்றியில் வைத்து நன்றாய் அரக்கி தேய்த்து 25 குடம் தண்ணீர் தலையில் விடவும். இப்படி 3 நாள் செய்யவும்.

9. கண்சிவக்கும், மனிதரை பாயும்.

10 பலம் வாகை இலையை இடித்து 1-படி தென்னங்கள்ளில் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூடு இடது விலாவில் போடவும்.

10. கண் குழிவிழும், குரல்வளையில் கட்டும், திகைத்துநின்று இரைதின்னும், சுருக்காய் வால் வீசும்.

வெள்ளைப்பூடு, கார்கோலரிசி வகைக்கு பலம் 2, இலுப்பை அரைப்பு பலம் கால் இவைகளை அரைத்து

கால்படி வேப்பெண்ணெயில்கலக்கிக் கொடுக்கவும். நூல் வலைக் கட்டியில் காலேமாகாணி அங்குலக்கம்பியினுல் 3-ம் நிம்பர் சூட்டைப் போடவும்.

11. கண்சிவக்கும், திகைத்துக்கொண்டுநிற்கும், வலிப்புக்கண்டு இழுக்கும், இரை தின்ளுது.

சுக்கு, அதிமதுரம் வகைக்கு பலம் 1, வீழி இலை பலம் 10, இவைகளை அரைத்து சிறுநீரில் கலக்கி புகட்டவும். இருவிலாவிலும் 3-ம் நிம்பர் சூட்டைப்போடவும்.

12. கண் குழிவிழும், வயிறு வீங்கும், வாயில் நீர்வடியும், தீவனந்தின்ளுது, மயிர்சிலிர்க்கும், திகரப்படும்.

வெங்காயம் பலம் 3, இஞ்சி பலம் 1, அமுக்கிரா வேர், ஊமத்தைவேர், வசம்பு வகைக்குப் பலம் கால், வேலிப்பருத்தி இலை பலம் 2, உப்பு படி அரைக்கால் அரைத்து 2 படி காடித்தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இடது விலாவில் போடவும்.

13. கண்ணீர் ததும்பும், சொருக்கு நீர்விடும், வாலாட்டாது, காலால் தட்டும்.

ஏலம் பலம் அரை, நெல்லிப்பருப்பு, கீழ்காய்நெல்லி வகைக்கு பலம் 3 அரைத்து 1-படி காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

14. கண் குர்தம் தள்ளினுலும் சிகப்புவிழுந்தாலும் பக்கியடித்தாலும்.

காத்தொட்டி இலை, சென்ளுயுருவி இலை, அதிசிசுவின் மலம் வகைக்கு பலம் கால், துத்தம் பலம் மாகாணி

சேர்த்து நன்றாய் அரைத்து போதுமான பசுவின் நெய்யும் சேர்த்து அரைத்து கொம்புச் சிமிளில் அடைத்து வைத்துக்கொண்டு கண்ணிலிட்டுவரவும்.

15. கண் சிவக்கும், மனிதரைபாயும், மயக்கமாய்நிற்கும், நீர்த்தாரைவழியாய் இரத்தம்விழும்.

தும்பை இலை, சீரகம் வகைக்கு பலம் 3 இவைகளை நன்றாய் அரைத்து கால்படி பசுவெண்ணெயில் கொடுக்கவும். அவசியமானால் 3 நாள் கொடுக்கவும்.

16 கண்ணில் பீளைசாடும், வாயில் நீர்வடியும், சரீரத்தில் வங்குபோலிருக்கும்.

தேகத்தைப்பற்றிய அத்தியாயத்தில் பார்க்கவும்.

17. கண் பீளைசாடும், தண்ணீர் அடிக்கடி குடிக்கும்.

கரும்புலாத்தி, வாகை இலைகள் வகைக்கு பலம் 1, சந்தன அத்தர் கூ இடை 2, காளைமுள் மரத்தின் வேர், விஷ்ணகிராந்தி வகைக்கு பலம் 2 இவைகளை அரைத்து 2-படி காடித் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும் போடவும்.

18. கண் சிவந்திருக்கும், வாயில் நீர்வடியும், கால் வலியினால் நடக்கமாட்டாது, நாக்கை இழுத்துப்பார்த்தால் உள்நாக்கில் மண்போலிருக்கும்.

சோத்துக்கத்தாழஞ்சோறு படி 1 அல்லது கரியபோளம் பலம் 1, கறியுப்பு படி கால் இரண்டையும் சேர்த்து

இரண்டுபடி காடித்தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இடது விலாவில் போடவும்.

## 19. கண்ணீர்வடியம், நிலத்தை பறண்டும், தலையை குலுக்கும், தீவனந் தின்னாது.

முருங்கை இலை பலம் 10, வேப்ப இலை பலம் 5 இவைகளை இடித்து இரண்டுபடி காடித் தண்ணீர்விட்டு பிசைந்து உப்பு படி கால் சேர்த்துக்கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும் போடவும்.

## 20. இரண்டு கண்ணும் தெரியாது.

திப்பிலி, சினைக்காரம், அதிமதூரம், சிறுதேக்கு வகைக்கு பலம் அரைக்கால், துத்தம் அரைக்கால் துட்டு இடை இவைகளை நல்ல நெய்விட்டு அரைத்து கண்ணி விட்டு வரவும். கொம்பைச் சுற்றியும் கண்ணைச்சுற்றியும் காலேமாகாணி அங்குலக் கம்பியால் சூடுபோடவும். அல்லது தும்பைப்பூ, கிராம்பு, நந்தியாவட்டம்பூ, சினைக்காரம் வகைக்கு அரைக்கால் பலம் எடுத்து கிராம்பையும் சினைக் காரத்தையும் தூள் செய்து கூடவைத்து கசக்கி சாறுபி ழிந்து கண்ணில் விடத்தீரும், 1 வாரம் இப்படிச் செய்யவேண்டும்.

## 21. சாட்டையடியினால் கண்கலங்கி இரத்தம் கட்டினால்.

காலேயரைக்கால் ரூபாயிடை படிகாரம் என்ற சினைக்காரத்தை நன்றாய் பொடிசெய்து முட்டையின் வெள்ளைக்கருவில் கலந்து கண்ணில்விட்டு பழைய மெல் லிசானவெள்ளைத் துணியின் இடையில் வைத்து கண் ணின்மேல் கட்டவும். சீக்கிரம் காய்ந்து போகாதபடி ஈரத்துணியை மேலேவைத்துக் கட்டவும்.

30-



### 22. கண்ணில் வெள்ளைபடர்ந்தாலும் பூ விழுந்தாலும்.

சுக்கு, உப்பு வகைக்கு 1 துட்டு இடை, துத்தம் அரைக்கால் துட்டு இடை இவைகளை அரைத்து தும்பை இலைச்சாற்றில் கலக்கி வடிகட்டி கண்ணிலிட்டு வர நீங்கும்.

### 23. மாலைக்கண்ணுக்கு அதாவது இரவில் கண் தெரியாமைக்கு.

வரமுள்ளி இலைச் சாற்றை வடிகட்டி கண்ணில் 1 வாரம், அல்லது அரைக்கீரையை நாள் ஒன்றுக்கு 20 பலம், 40 நாள் தினிபோடவும், அல்லது 1 வெள்ளாட்டுப்பித்து, கால்பலம் சீனக்காரம், குருக்குமுத்துவிதை கால் பலமும் சேர்த்து அரைத்து (நன்றாய் அரைத்து) கண்ணில்விடத் தீரும். மருந்து காய்ந்துபோனால் முலைப் பாலில் உரசிப்போடவும்.

### 24. கண் குழியும், கண் சிவக்கும், தலையை எடுத்துப்பார்க்கும், கொம்பை பிடிக்க ஒட்டாது, கட்டவோட்டாது.

இதை வாயைப்பற்றிய குறிப்பில் எட்டாவதின் பின் பாகத்தில் காணலாம்.

### 25. நன்றாய் இரை தின்னாமல் கலைந்துதிரியும், பதஷ்டமாய் பார்த்து மனிதரை வெருட்டிப்பாயும். பின்பு இரண்டு கண்களும் தெரியாது.

5 பலம் சாளைக்கருவாட்டை அரைத்து கால்படி எலுமிச்சம் பழச்சாற்றில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி

3 நாள் கொடுக்கவும். 6-ம் நிம்பர் சூட்டை நெற்றியில்போடவும். 3-ம் நிம்பர் சூட்டை இடது விலாவில் போடவும்.

# V. மூக்கு.

## முதலாவது மாட்டு மூச்சை முகர்ந்து பார்த்து நோயைக் கண்டுபிடி.

1. மூக்கு வேர்த்து வாய் புண்ணாகும், விட்டையடைக்கும்.

அரைப்படி விளக்கெண்ணெயைக் கொடுத்து 2மணி நேரத்துக்குப்பின் அரை மணிக்கு ஒரு தடவை 2 படி வெந்நீராக நாலைந்து தடவை கொடுக்கவும். பேதிபோன பின் குணமாகும்.

2. மூக்கு வேர்க்கும், மூக்கிலும் வாயிலும் நீர் வடியும், மயிர்சிலிர்க்கும், அரைமேய்ச்சலாய் மேயும்.

ஆவரை இலை, பூ, கொழுந்து, பட்டை சமூலம் வகைக்கு பலம் அரை சேர்த்து இடித்து பிழிந்தசாறு படி அரை, நல்லெண்ணெய்படி கால், இவைகளை ஒன்றாய் கலந்து கொடுக்கத்தீரும். இடது விலாவில் 3-ம் நிம்பர் சூட்டைப்போடவும்.

3. குன்னி மூக்கை பூமியில்குத்தி கீழேவிழும் அல்லது குன்னி நிற்கும்.

பொதுக்குறிப்பில் 54-ம் நிம்பரை பார்க்கவும்.

## 4. மூக்கை பூமியில் குத்திக்கொண்டு நிற்கும்.

மிளகு பலம் 3, திப்பிலி பலம் 1, அரைத்து காடியில் கலக்கி புகட்டவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். கீழ்வாயைச்சுற்றி சூடுபோடவும்.

## 5. மூக்கடைப்பு.

மூக்கடைப்பு என்பது மாட்டின் மூக்குக்குள் வளருகிற புத்து. இது மூக்கின் முகப்பில் ஆரம்பித்து, மூக்குக்குள்ளிருக்கும் மிருதுவான எலும்பைச்சுற்றியிருக்கிற சதைவரையும் படர்ந்து வளர்ந்து மூக்கை அடைத்துப் போடுகிறது, இதில் மூக்கடைப்பு, தண்டடைப்பு, தவளையடைப்பு, சவ்வடைப்பு என நாலு பெரிய பிரிவுகளும் பல உட்பிரிவுகளுமுண்டு. இப்புத்தை துவக்கத்தில் கீழே காட்டிய மருந்துப் பக்குவத்தின்படி செய்தால் நின்றுகொள்ளும். நோய் முற்றிவிட்டால் அறுத்து எடுக்காமல் தீராது. கரண்டிபோட்டு வழிப்பது கொழுத்த மாடுகளுக்கு தீமையைமாத்திரம் வருவிக்கும். அறுத்து எடுத்தாலும் மருந்துப்பக்குவத்தைச் செய்யாவிட்டால் பிரயோஜனமில்லை. நோய் திரும்பி அதிகக் கெடுதல் செய்யும். ஈரவெங்காயம், வசம்பு, நொச்சி, தைவேளை இலைகள் இவைகளை சமன் கூட்டி கால்துட்டு இடை துத்தம் சேர்த்து சிறுநீர்விட்டு நன்றாய் அரைத்து 3 நாள் நாசியில் விரல் எட்டுமட்டும் சுற்றி அழுத்தித் தேய்த்து மூன்று நாழிகைவரை வாய்க்கூடு போட்டுவைக்கவும். 4-ம் நாள் அரைப்பலம் சீனக்காரத்தை ஒன்றேகால்படி தண்ணீரில்போட்டு 4 தடவை நாசியில் பிழியவும். 5-ம் 6-ம் நாளும் அப்படியே செய்யவும். மருந்து தேய்ப்பதில் கை எட்டாத தூரத்திலும் புத்து இருந்து எடுபட்டது என்று காணும்போது ஒருசாண் குச்சியில் துணியைச்சுற்றி மூக்

குக்குள் மருந்தைத்தள்ளி தேய்க்கவும். முகப்பில் புத்து சுரசுரப்பாயிருந்தால் ஒவ்வொருநாளும் நகத்தால் சுரண்டி தேய்க்கவும். சீனக்காரத்தண்ணீர் மூக்குக்குள் விடுகிற காலத்தில் நித்தமும் மாட்டைக் குளிப்பாட்டுவது நல்லது. சீனக்காரம்விட்ட 3-ம் நாள் மாடு தும்மி மூக்குக்குள இருக்கிற அசடு வெளியேறும். அப்படி தும்மாவிட்டால் தும்மும்படி இலுப்பை அரைப்பை வெள்ளாட்டங்கோமியத்தில் ஊறப்போட்டு, கண்டங்கத்திரிக்காயும் சேர்த்து மூக்குக்குள் பிழிந்தால் நன்றாய் தும்மி சுகமாகும். தும்மாவிட்டால் அசடு தானே அடைத்து, அடைப்பு நீங்காமல் இருக்கும். பச்சிலே மருந்து ரணவைத்தியருடைய நிதானத்துக்குமிஞ்சி மூக்குக்குள்ளிருக்கும் சதையை அழுகவைத்து நோயைக் கொல்லும். சீனக்காரம் புண்ணை ஆற்றும். 5-ம் நிம்பர் சூட்டை மூக்குக்குமேல் படத்தில் இருக்கிறபடி போடுவது நல்லது.

## 6. மூக்கில் நீர்வடியும், அடிக்கடி செருமும்.

மஞ்சள் பலம் அரை, 6 முற்றின தேங்காய்ப் பாலும் கொத்தமல்லி, சீரகம் வகைக்கு பலம் 1, புளி பலம் 3, அரிசி படி 1, மசாலைகளை அரைத்து மற்றதை எல்லாம் சேர்த்துக் காய்ச்சி முருங்க இலை பலம் 10 போட்டு காய்ச்சி கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

## 7. மூக்கை சுளித்திருக்கும், வாயில் நீர் வடியும் அல்லது வாயை மூடிக்கொள்ளும், குருவி நிற்கும்.

வெள்ளைப்பூடு, குப்பைமேனி, ஆடுதீண்டாப்பாளை, பேய்க்குமட்டி வகைக்கு பலம் 1, வசம்பு பலம் அரை இவைகளை அரைத்து கால்படி நல்லெண்ணெயும் சேர்த்

32-



துப்பிசைத்து கவளங்கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

8\. மூக்கு வாய் உலர்ந்திருக்கும், சாணி போடாது, வயிற்றில் வலது பக்கத்தை அழுத்திப் பார்க்க விடாது.

கரியபோளம் பலம் 2, இதை ஓட்டில்போட்டு அரை படி தண்ணீர்விட்டு அடுப்பில் ஏற்றி தீ எரித்து கலக்கிக் கரைத்து சக்கையை எடுத்துப்போட்டு இளவெதும்பலில் கொடுக்கவும். 2-மணி நேரத்துக்குப் பின் இரண்டு இரண்டு படி வெந்நீர்த்தண்ணீர் பேதி போகும் மட்டும் கொடுக்கவும். பேதி போனபின் அவசியமானால் கூடம், பொட்டிலுப்பு வகைக்கு அரைப்பலம், நிலவேம்பு 2பலம் நன்றாய் அரைத்து கால்படி சாராயமும் சேர்த்துக் கொடுக்கவும்.

9\. மூக்கில் இரத்தம் வடியும், செருமும், நீர் இரத்தம்போலிருக்கும்.

கொச்சிக் கொழுந்து, நைவேளை, சிறுதும்பை, குப்பைமேனி, எருக்கலை வகைக்கு பலம் 1, வசம்பு பலம் 1, வெங்காயம் பலம் 5, முருங்கை இலை பலம் 10, இடித்து சிறு நீரில் அல்லது மோரில் கலக்கிக் கொடுக்கவும்.

10\. மூக்கிலும் வாயிலும் நீர்வடியும்.

வெங்காயம் பலம் 10, எருமைமோர் படி 5, இலுப்பை தனிச்சாறு படி அரை, மூன்றையும் சேர்த்துக் கொடுக்கவும். 3 நாள் இப்படிக் கொடுக்கவும். வேறு தண்ணீர் காட்டப்படாது. அதாவது: குடிதாளித் தண்ணீர்க் காட்டப்படாது.

11. மூக்கில் இரத்தம் விழும், உடல் நடுங்கும், குன்னி நிற்கும், இரை தின்னாது.

மதுக்காரைவேர் பட்டை பலம் 4, வெள்ளைப்பூடு பலம் 2, வசம்பு பலம் அரை, வெங்காயம் பலம் 10 இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டதீரும். 3-ம் நிலை சூட்டை இடது விலாவில் போடவும்.

12. மூக்கு வியர்க்கும், அல்லது வறட்சியாயிருக்கும், வாய் புண்ணாகும், சாணிபோடாது.

ஏலம் பலம் அரை, அதிமதுரம், சீரகம் வகைக்கு பலம் ஒன்றரை, 3 படி நெல்லிக்காயை இடித்து சாறு எடுத்து 1 படி மோரும் சேர்த்து மேற்படி மருந்துகளை அரைத்துக் கூட்டிக்கொடுக்கவும்.

13. வெறும் தும்மல் அடிக்கடிப் போட்டால்.

நிலக்கடம்பு என்ற முத்தெருக்கன்செவிச் செடியை பிடுங்கிக் கசக்கி சாறுபிழிந்து மூக்கில் ஊதவும்.

14. மாட்டுக்கு செருமல் கண்டு மூக்கில் உதப்பி சாயும்,

பொது குறிப்பு 57-ல் பார்க்க. மூன்று பலம் மிளகும், 5 பலம் வெற்றிலையும் அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

# VI. வாய்.

## நோயைக் கண்டுபிடிக்க, முதலாவது வாயைச் சோதி.

1. வாயில் நீர்வடியும், கண்சிவக்கும், அடிக்கடி நீர் சிறுத்து இறங்கும்.

மிளகு பலம் 2, வெங்காயம் பலம் அரை இவைகளை இரண்டுபடி பசுவின் பாலில் அரைத்து கலக்கிப்புகட்டத் தீரும். அல்லது 3 பலம் நாயுருவி இலையை அரைத்துத் தண்ணீரில் கலக்கி புகட்டத்தீரும்.

2. வாயில் நீர்வடியும், பல்லைக்கடிக்கும், சாணி களிம்புபோலிருக்கும், நாறும்.

விளாம்பட்டை, வேலாம்பட்டை வகைக்கு பலம்10 இடித்து வெந்நீர்விட்டு பிசைந்து 1 படி சாறு எடுத்து 1 படி தினையரிசியை வேகவைத்து, எல்லாம் சேர்த்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும் 3-ம் நிம்பர் குட்டை இடது விலாவில் போடவும்.

3. வாயினால் உதப்பி சாயும், முகத்தில் வீங்கும், செவிதாழும், நன்றாய் நடக்க மாட்டாது.

முருங்கைப்பூ பலம் 10, மாதளம்பூ பலம் 5, மாதளம் பிஞ்சு பலம் 5, கிராம்பு பலம் 1. இவைகளை அரைத்து காலையணாக்கால் படி சாராயத்தில் கலக்கிக்கொடுக்கவும். வேண்டுமானால் வெந்நீர் கூட்டிக்கொள்ளவும். 8-ம் நெ. குட்டை முகத்தில் வீக்கத்திலும் போடவும்.

4. வாயை மேல்லும், மண்ணைக் கவ்வும், குன்னி நின்று கீழே விழுந்து காலை பட்டேன்று உதறும். இதை தேறியன் நோய் என்று சோல்வதுண்டு.

இரு மூக்குக்கும் மேல் ஓடும் பெரு நரம்புக்குச் சமீபமாய் கீழ் நோக்கி ஓடும் சிறுநரம்பு இரண்டையும் கூர்மையான பெரிய ஊசியால் குத்தி எடுத்து அறுத்து இரத்தத்தைநசுக்கி வெளியேற்றவும். 3-ம் நிம்பர் சூட்டை இடது விலாவில போடவும். உடனே மாடு எழுந்திருக்கும். ஆனல் சிலசமயத்தில் 4-மணி நேரத்திற்குள் மாடு மரித்துப்போம்.

5. வாயில் வெண்ணுரை தள்ளும், விக்கல் எடுக்கும், கண் சிவக்கும், சுற்றிச் சுற்றிவரும். சிலவேளைகளில் கண் பார்வை மங்கும்.

வெள்ளாடு, பசுவின் கோமியங்கள் வகைக்கு 1 படி, பச்சை நெல் தவிடு படி 2, இவைகளை ஒன்ருய் கலந்து கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். 3-ம் நெ. சூட்டை இடது விலாவில் போடவும். இம்மருந்தைக் கொடுக்குமுன் பேதிக்குக் கொடுத்து பேதிபோனபின் ஷை மருந்தைக்கொடுப்பது நல்லது.

6. வாயில் இரத்தம் விழும், கண் சிவக்கும், நின்று தூங்கும்.

2 படி தவிட்டில் 5 எருக்கலங்காயை அரைத்து வெந்நீரில் பிசைந்து கொடுக்கவும்.

34-



7. வாயை மூடாமல் நின்று கூப்பிடும், வாலை சுருக்கமாய் வீசும், தடுமாறும், தீவனம் தின்னாது.

*மிளகு பலம் 3, திப்பிலி, வெள்ளைப்பூடு வகைக்கு பலம் 1, வசம்பு, வெங்காயம் வகைக்கு பலம் கால், நைவேளை, குப்பைமேனி, வெள்ளருகு வகைக்கு பலம் 3, இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும் போடவும்.*

8. வாயை பிளக்கும், வாயிலே நுரைதள்ளும், செங்கோல் காட்டு சுருக்கு மூத்திரம் விடும், மயிர் சிலிர்க்கும், இரை தின்னாது. சற்றுதூரம் ஓடி விழும் அல்லது கண் குழியும், கண் சிவக்கும், தலையை எடுத்துப்பார்க்கும், கொம்பை பிடிக்க வொட்டாது, சுட்டவொட்டாது.

*முதலாவது தொண்டைக்குள் வெள்ளை ஆடைபோலிருக்கிறதை சுத்தம் செய்து, நைவேளை, குப்பைமேனி, சிறுதும்பை, வகைக்கு பலம் 5, சேர்த்து அரைத்து வெள்ளாட்டு கோமியத்தில் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும் போடவும்.*

9. வாயை வாயைப் பிளக்கும், நாக்கை நீட்டும், வாயில் நீர்வடியும், கண் சிவந்திருக்கும்.

*அகத்திக்கீரை, குருஞ்சாக்கீரை வகைக்கு பலம் 10, சீனக்காரம் பலம் 1, சித்திரப்பாலாடை பலம் 5, கோவங்கிழங்கு பலம் 2, இவைகளை அரைத்து 2 படி காடியில் கலக்கிக் கொடுக்கவும்.*

**10.** வாய் புண்ணாகி வாயிலிருந்து நீர் வடியும், குளம்புக்கிடையிலும் குளம்பின் ஓரத்திலும் புண்ணாகும், நாசியிலும் வாயிலும் முகர்ந்து பார்த்தால் துர் நாற்றமிருக்கும், மயிர் சிலிர்க்கும்.

அத்திப்பிஞ்சு, பருத்திப்பிஞ்சு வகைக்குப் பலம் 10, மீன் கழுவின தண்ணீர் படி i, சாளைக்கருவாடு 3 பலம், அல்லது உயிருள்ள அயிரைமீன் படி அரை, ஆவாரம்பட்டை பலம் 1, பேய்க்குமட்டிக்காய் 2, இவைகளில் கிடைக்கிற 4 மருந்தை 2 படி பனங்கள்ளில் கொடுக்கவும்.

அல்லது சீனக்காரம் பலம் அரை, அகத்திக்கீரை, குருஞ்சாக்கீரை வகைக்கு பலம் 10. இவைகளை அரைத்து 2 படி காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவும்.

கால் புண்ணில் கீல் அடிக்கலாம், அல்லது கெரோசின் எண்ணெய் என்ற மண் எண்ணெயை விடலாம். அல்லது கால்பலஞ் சூடத்தை வீசம்படி தேங்காய் எண்ணெயில் கரைத்து காலில் போடவும்.

**11.** வாயில் நீர்வடியும், சாணிபோடும்போது வாயை பிளக்கும், பல்லைக்காட்டும்.

பெருமரத்துப்பட்டை அல்லது உதியம்பட்டை பலம் 10 இடித்து 1 படி புளித்த எருமைமோர் விட்டு பிசைந்து சாறு எடுத்துக்கொடுக்கவும். 3-ம் நெ. சூட்டை இடது விலாவில் போடவும்.

12. வாய் அசை போடாது, தீவனந்தின்னாது, எழுந்திருக்க மாட்டாது, நாக்குக்கனத்திருக்கும், தலையை மடக்கிக்கொண்டு படுத்திருக்கும்.

*மிளகு பலம் 3, நொச்சி இலை பலம் 1, இவைகளை அரைத்து 2 படி காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். 4 காலிலும் 1-ம் நிம்பர் சூடும் கழுத்தில் 4-ம் நிம்பர் சூடும் போடவும்.*

13. வாயில் நீர்வடியும், நாற்றமெடுக்கும், தொண்டையில் திரண்டு பந்துபோல் மூச்சையடைக்கும், சொருக்கு நீர் விடும், மயிர் சிலிர்க்கும், இரை தின்னாது, வருத்தப்படும்.

*அதிமதூரம், கோரங்கிழங்கு வகைக்கு பலம் 1, பெருஞ்சீரகம் பலம் 3, பீநாறிப்பட்டை பலம் 3, தைவேளை, பொடுதலை, இசங்கு இலை வகைக்கு பலம் 5, இவைகளில் கிடைக்கக்கூடிய 5 மருந்தை அரைத்து 2 படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.*

14. வாயாலே கற்றாழஞ் சோறுபோல் தள்ளும், வயிறூதும், துன்றிநடக்கும், சரீரம் குளிர்ந்திருக்கும்.

*வசம்பு பலம் அரை, சனி நாயிரு வெள்ளைப்பூடு வகைக்கு பலம் 1, இலுப்பைப்பிண்ணாக்கு, வேப்பம்பிண்ணாக்கு வகைக்கு பலம் கால், தைவேளை பலம் 10, தும்பை பலம 5 இவைகளை இடித்து சாறு பிழிந்து மேற்படி மருந்துகளை அரைத்து எல்லாவற்றையும் சேர்த்து போதுமான வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். இரு விலாவிலும் 3-ம் நிம்பர் சூட்டைப்போடவும்.*

15. வாயை வாயைப் பிளக்கும், தின்ற தீவனத்தை அதப்பித்தள்ளும், மெலியும், அசந்து நடக்கும்.

அதிமதுரம், குளப்பாளைவேர் வகைக்கு பலம் 2, கருஞ்சீரகம் பலம் 1, தவிடு படி அரை, ஷை மருந்துகளை அரைத்து 2 படி தண்ணீரில் வேகவைத்து கஞ்சியாகக் காய்ச்சிக்கொடுக்கவும். குடிக்க வெந்நீர் கொடுக்கவும். 7-ம் நிம்பர் சூட்டை நடு முதுகில் போடவும்.

16. வாயில் நீர்வடிந்து ஆரம்பத்தில் நாயோட்டமாய் ஓடித்திரியும், பின்பு நடக்க மாட்டாது. சரீரம் நடுங்கும், நாக்கை நீட்டும்.

எருக்கலம் இலை பலம் 2, அரைத்து வேப்பெண்ணெய் படி அரை, இரண்டையும் கலந்து கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இரு விலாவிலும், 1-ம் நிம்பர் சூட்டை 4 காலிலும் போடவும்.

17. வாயிலும் மூக்கிலும் நீர் வடியும், மூக்கு வியர்க்கும், மயிர் சிலிர்க்கும், அரை மேய்ச்சலாய் மேயும்.

மூக்கைப்பற்றிய குறிப்பில் 2-வது நிம்பரில் சொல்லியிருக்கிற பக்குவம் செய்யவும்.

18. வாயில் நீர்வடியும், மயிர் சிலிர்க்கும், இரை தின்னாது.

முக்கால்படி எள்ளை இடித்து, 1 படி பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்கவும்.

-36-



19. வாயில் நீர் வடியும், திகைத்து நிற்கும், கண்ணில் பீளை சாடும், இரை தின்ளுது.

கருஞ்சீரகம், அதிமதூரம் வகைக்கு பலம் 3, இரண்டையும் அரைத்து காடித்தண்ணீரில் கலக்கி புகட்டவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

20. வாய் திறவாமலிருக்கும், கண் சிவந்திருக்கும்.

இந்துப்பு, சீனக்காரம் வகைக்கு பலம் 1, காயம் பலம் கால், வேப்பங்கொழுந்து பலம் 1, சுக்கு, மிளகு வகைக்கு பலம் 1, திப்பிலி பலம் அரை, வசம்பு பலம் கால், இவைகளில் கிடைக்கக்கூடிய 5 மருந்தை அரைத்து கால்படி சழுதை மூத்திரத்தில் அல்லது 1 படி பசுவின் பாலில் கொடுக்கவும். சாயந்திரம் வெந்நீர் காட்டவும். 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும் 6-ம் நிம்பர் சூட்டை கொம்பைச்சுற்றிப் போடவும்.

21. பல்லைக்கடிக்கும், திகைத்து நிற்கும், மூக்கை ஏதாவதொன்றில் தேய்க்கும், அல்லது சேரும்.

மிளகு, கோரங்கிழங்கு வகைக்குப் பலம் 3, வெற்றிலை, சிவகரந்தை வகைக்கு பலம் 5, கருஞ்சீரகம் பலம் 2 இவைகளை அரைத்து 1 படிபாலில் அல்லது வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். 8-ம் நிம்பர் சூட்டை இரு கன்னத்திலும் போடவும்.

22. பல்லைக் கடிக்கும், வெயிலில் நிற்கும், கோட்டாவி விடும், அசைபோடாது.

வெங்காயம் பலம் 10, வசம்பு பலம் அரை, நிலவேம்பு பலம் 5, வேப்பம்பட்டை பலம் 10, இவைகளில்

வெங்காயத்தை நீக்கி மற்ற மருந்துகளை 5 படி தண்ணீர் விட்டு வேகவைத்து, 3 படியாக வற்றவைத்து, 3 படி குருணை அரிசியையும் வேகவைத்து 1 படி கஷாயமும், மூன்றில் ஒருபங்கு கஞ்சியும் வெங்காயமும் சேர்த்துக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். கஷாயம் கெட்டுப்போகாதபடி அடுப்பில் சுடவைத்து காக்கவேண் டும். (வெங்காயத்தை அரைத்துக் கூட்டிக்கொள்ளவும்).

23. வாய்க்குள் பல்லரணையில் சதைவளர்ந்து அரணையோரமாய் வளர்ந்துவந்து முன் னுக்குத் தொங்கும். அசை போடும் போது உமிழ்நீரை உணச்சி விழுங்காத படி உமிழ்நீர் வடிந்துபோம்.

இதை கன்னத்தைக்கிழித்து கடைவாய்ப்பல் ஓரத்தில் ஒட்டியிருக்கிற சதையை நன்றாய் கத்தரித்தெடுத்து துத் தத்தால் நன்றாய்த் தேய்த்து அப்புறம் கன்னத்தில் முதல் ஜவ்வு, இரண்டாம் ஜவ்வு, மூன்றாவது தோல் இவைகளை டிஞ்சர் அயோடின் போட்டு தைக்கவும். மாட்டுக்கு கஞ்சி, ஆட்டின் உளுந்தம் பருப்பு முதலியவைகளை ஆறு நாள் வரையும் கொடுக்கவும். அப்புறந்தான் பச்சைப்புல் போடவும்.

24. நச்சுப்பல் மாடுபோல் தின்ற தீவனத்தை அதப்பித் தள்ளும்.

பொதுக்குறிப்பில் 35-வது பார்க்கவும்.—நச்சுப்பல் லைத் தட்டுகிறதில் பல் விழுந்து போகிறது. அதினால் மற்ற பல்லுகளுக்கும் கெடுதியே ஒழிய வேறுலாபமில்லை.

# VII. நாக்கு.

## 1. நாக்கு வீங்கி வெளியில் தள்ளும், மூக்கில் இரத்தம் வடியும், இரை தின்னாது.

ஆவரவேர்ப்பட்டை, கறிவேப்பிலை, கிரந்திநாயகம் இலை வகைக்கு பலம் இரண்டேகால் இவைகளை அரைத்து 1 படி காடியில் கலக்கி புகட்டவும். இப்படி மூன்று நாள் கொடுக்கவும். கிரந்திநாயக இலையை அரைத்து தேகம் முழுவதும் துவாலைபோடவும்.

## 2. நாவரணை நோய்.—நாவை புரட்டிப் பார்த்தால், இரண்டு பச்சை நரம்பு ஓடும்.

அதை ஊசியால் குத்தி இரத்தத்தை அதக்கி வெளியேற்றி சீனக்காரதூளினால் தேய்க்கவும். அல்லது உப்பும் புளியும் சமமாய் அரைத்து நரம்பு குத்தின இடத்தில் தேய்க்கவும். சீந்தித்தண்டு பலம் 3, எள்ளு படி அரை, கருப்புக்கட்டி பலம் 3, வெந்தயம் படி கால், இவைகளை அரைத்து 1 படி பசுவின் பாலில் கொடுக்கவும்.

## 3. நாவோந்தி நோய்.—நாவில் ஓந்தி முதுகு போல் முள்ளு முள்ளாயிருக்கும், தீவனவம் நன்றாய் தின்னாது. நாவும் சற்று தடிப்பாயிருக்கும்.

நாக்கை சற்றுவெளியே இழுத்துக்கொண்டு நாவின் நுனிக்கு 2 அங்குலத் தூரத்திலிருந்து கத்தியால்லேசாய் குறுக்கே கீறி நகத்தால் சொறிந்து உரித்தால் நுனி நாவு வரையும் தோல் வந்துவிடும். அப்புறம் சீனக்காரத்தூளை தேய்த்துவிடவும். சிலர் நாவை எருக்கலம் பழுப்பு

வைத்து சுட்டு உரிப்பார்கள். இது மாட்டுக்கு அதிக வேதனை. இரைதின்க 3 நாள் செல்லும்.

## VIII. காது.

### 1. காதிலிருந்து சலம் வரும், காது நன்றாய் கேளாது.

தைவேளை இலையை கசக்கி பிழிந்த தனிச்சாறும், இதற்கு சமன் நல்லெண்ணெய் சேர்த்து இரும்பு கரண்டியில் காய்ச்சி ஆறவைத்து காதில் விட்டு பஞ்சால் அடைக்கவும். அல்லது

கொமட்டிக்காயை இரண்டாய் பிளந்து மத்தியிலுள்ள விதையை மட்டும் எடுத்துப்போட்டு அதில் கார்கோல் அரிசியாவது சருஞ்சீரகமாவது அமுக்கி நல்லெண்ணெயை விட்டு இரண்டுநாள் ஊறவைத்து பிழிந்து காதில் அடைக்கவும்.

### 2. காதுகளும் கன்னங்களும் வீங்கும்.

10 பலம் இலுப்ப இலையை இடித்து சாறு எடுத்து கால்படி பசுவின் நெய்யும் சேர்த்துக் கொடுக்கவும். வசம்பு வேப்பங்கொழுந்து மஞ்சள் சமன் சேர்த்து அரைத்து வீக்கத்தில் பூசவும்.

### 3. செவி வீங்கும், காதிலிருந்து இரத்தம் வரும், காது கேளாது, காலால் வீக்கத்தில் சொறியும்.

திப்பிலி, சுக்கு, அமுக்கிராவேர் வகைக்கு பலம் 1, மிளகு பலம் 3, வசம்பு, பெருங்காயம் வகைக்கு பலம் கால்

இவைகளை அரைத்து காலேயனாக்கால்படி சாராயத்தில் கலக்கிக் கொடுத்து காதில் சிரிஞ்சி அடித்துக் கழுவி முதலாவது நிம்பரில் சொல்லிய எண்ணெயை காய்ச்சி விட்டடைக்கவும்.

---

# IX. வால்.

## 1. வால் கூளையானல்.

நல்லெண்ணெயும் வேப்பெண்ணெயும் சமமாய் கலந்து இரும்புக் கரண்டியில் நுரையமாகக் காய்ச்சி கூளைவாலில் போட ரோமம் வளரும். ஒடிந்த வாலைச்சுற்றிக் கட்டி ஷை எண்ணெயைப் போட்டால் புண்ணாறும், வால்கூடும். கொட்டைப்பாக்களவு பெருங்காயத்தை உள்ளுக்குக் கொடுக்கவும். மூன்று நாள் கொடுக்கவேண்டும். இந்த நோய்தான் ஆனைக்கடி. சாணி சரியானபடி செரியாமல் அதவல் குதவல் அல்லது பெருஞ்சாணியாய் போடும். வால் ஒடிந்தாலும் ஷை எண்ணெயைப் போடலாம்.

## 2. வால் தூக்கி நிற்கும், குண்டியை தாழ்த்தும், நாக்கு தடித்து தீவனம் தின்னது, நடத்தினல் பின்னங்கால் நோண்டும்.

வெந்தயம், ஆவாரங்கொழுந்து, அத்திப்பிஞ்சு வகைக்கு பலம் 3, ஓமம் 1 பலம், அரைத்து 2 படி காடித் தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். நடுமுதுகில் 7-ம் நிம்பர் சூட்டை போடவும்.

## 3. வாலே சுருக்காய் வீசும், வாயை மூடாமல் நின்று கூப்பிடும், தடுமாறும், தீவனந் தின்னது.

வாயைப்பற்றிய குறிப்பில் 7-வது நிம்பரைப் பார்க்கவும்.

## X. வயிறு.

### 1. வயிறூதும், அருவருப்பாய் மேயும், செவி தாழும்.

5 பலம் வெற்றிலையும், 3 பலம் மிளகும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இடது விலாவில் போடவும். நசியம் கொஞ்சம் தும்பை இலையோடு 12 மிளகும், ஒருத்தலை வெள்ளைப்பூடும் சேர்த்து சிறுநீர் விட்டு தட்டி சுத்தமான துணியில் வைத்து கண், மூக்கு, செவிகளில் பிழியவும். அல்லது கருஞ்சீரகம், நற்சீரகம், ஏலம், மிளகு, சுக்கு இவைகள் வகைக்கு 1 பலம் சேர்த்து அரைத்து சிறு நீரில் கலக்கி புகட்டவும். 3 நாள் புகட்டவும்.

### 2. வயிறூதும், திகைத்து நிற்கும்.

கரியபோளம் 2 பலம் வெந்நீரில் கரைத்து பேதிக்கு கொடுக்கவும். பேதி நன்றாய் போனபின் இன்னும் அவசியமானால் 3 பலம் மிளகும், அஞ்சு பலம் வெற்றிலையும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

### 3. வயிறூதும், வயிறு இரையும், வாயில் நீர் வடியும், கெட்ட புல்லை தின்னும். ஆனால் நன்றாய் இரை தின்னாது.

வசம்பு பலம் அரை, மிளகு, முடக்கொத்தான், கொழுஞ்சி வகைக்கு 3 பலம், அரைத்து 1 படி பனங்கள்ளில் அல்லது 2 படி காடித்தண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும்.

4. வயிறு வெடிக்கிறாப்போல் ஊதும். தலையை கீழே போட்டுக்கொண்டு நிற்கும்.

வெற்றிலை பலம் 5, மிளகு பலம் 3, இவைகளை அரைத்து 1 படி பசுவின் பாலில் கொடுக்கவும்.

5. வயிறு கூப்பிடும், வாயில்நீர்வடியும், கண்ணில் பீளை சாடும், சாணி வீசும்.

சீரகம், ஓமம், கருஞ்சீரகம், எருக்கலைமொட்டு வகைக்கு பலம் 1, சுக்கு பலம் 2, அரைத்து பசுவின் பால் படி 1-ல் கலக்கிக் கொடுக்கவும். 3-ம் நம்பர் சூட்டை இடது விலாவில் போடவும்.

6. வயிறூதும், தொண்டையை பற்றி வீங்கும், வாயில் நீர் வடியும், செவி தாழும்.

சங்கங்குப்பி, பேய்பீக்கஞ் சாறுகள் வகைக்கு படி அரை, சீரகம் பலம் 2 அரைத்து எல்லாவற்றையும் 1 படி காடித் தண்ணீருடன் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கத் தீரும்.

7. வயிறூதும், வாயில் நீர்வடியும், கால் குன்னி நிற்கும், செவி தாழும், மயிர் சிலிர்க்கும்.

சுரை இலை, குளியிட்டான் என்ற தண்ணீர்விட்டான் இலை வகைக்கு 3 பலம் இவைகளை 2 படி தண்ணீரில் வேக வைத்து அடி தண்ணீரும், வெங்காயம் 3 பலம், சீரகம் 2 பலம், இஞ்சி 1 பலம், வசம்புகால்பலம் அரைத்து கலக்கிக்கொடுக்கவும். தைவேளையும் மிளகும் மென்று காதிலும் நாசியிலும் ஊதவும்.

8. வயிறு வீங்கும், காலை தூக்கிவைக்கும், வாயிலும் கண்ணிலும் மயிர்க் காலிலும் நீர் வடியும்.

மிளகு பலம் 3, வெள்ளைப்பூடு பலம் 1, வசம்பு பலம் அரை, கோழியவரை பலம் 10, இடித்து 1 படி மோர்விட்டு பிசைந்து சாறு எடுத்து டி மருந்துகளை அரைத்து கலக்கிக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கத்தீரும்.

9. வயிறூதும், வாயில் நீர் வடியும், விழுந்து விழுந்து எழுந்திருக்கும்.

வேலிப்பருத்தி பலம் 10 இடித்து 1 படி மோர் விட்டு பிசைந்து சாறு எடுத்து அரைக்கால்படி உப்பும் சேர்த்துக் கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கக் குணமாகும்.

10. வயிற்று வலியினால் அடிக்கடி படுக்கும், எழுந்திருக்கும், வயிற்றை திரும்பிப் பார்த்து கொம்பினால் அல்லது காலால் வயிற்றை அடிக்கும், இரைதின்னமல் கஷ்டப்படும், சாணி போடாது, பிந்தி வயிறூதும்.

மிளகு பலம் 3, கரியபோளம் பலம் 2, சுக்கு பலம் 1, பெருங்காயம் பலம் கால், கரியபோளத்தை வெந்நீரில் கரைத்து இறுத்து மற்ற மருந்துகளையும் அரைத்து கலக்கிக்கொடுக்கவும். 2-மணி நேரத்துக்குப்பின் அரைமணிக்கு ஒரு தடவை 2 படி வெந்நீர் வீதம் 4, 5 தடவை கொடுக்க பேதியாகும். குணமாகும். வயிற்றுவலி அதிகமிருந்தால் கம்பளியை இளவெந்நீரில் நனைத்து, அடி வயிற்றில் ஒத்தணம் கொடுக்கவேண்டும்.

௯௦´



11. வயிறூதும், இரை தின்னாது, மயிர் சிலிர்க்கும், செவி தாழும், சாணி உலர்த்தியாய்ப் போடும்.

கடுக்காய், காசுக்கட்டி வகைக்கு பலம் அரை, சோத்துக்கத்தாளஞ்சோறு படி 1, அல்லது கரியபோளம் பலம் 2, பழம் புளி பலம் 3, 1 படி காடியில் கலக்கிக் கொடுக்கவும். 10-ம் நிம்பர் போல் 4, 5 தடவை வெந்நீர் கொடுக்கவும்.

## XI. வீக்கம்.

1. நெஞ்சில் வீங்கினால்.

வேப்பங்கொழுந்து பலம் 1, வசம்பு பலம் அரை, இரண்டையும் வெந்நீரில் அரைத்து காலை மாலை 3 நாள் வீக்கத்தில் பூசவேண்டும் இரண்டாந்தடவை பூசும்போது முந்திப்பூசினதை இளவெந்நீரால் கழுவித் துடைத்து ஈரம் உணருமுன் செய்து வைத்திருந்த மருந்தைப் பூசவும்.

2. தலைவீங்கி கண்கூசி கண்ணில் நீர்வடிந்தால்.

விளக்கெண்ணெயை-நெற்றியிலும் கொம்பைச் சுற்றியும் நன்றாய் அரக்கி தேய்த்து காலையில் 25 குடம் தண்ணீரை தலையில் விடவும். ஆடாதோடை இலை பலம் 5, இலுப்பைப்பூ பலம் 10, அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். பூ கிடையாவிட்டால் இலை பலம் 10.

### 3. முகம் வீங்கினல்.

வேலிப்பருத்தி பலம் 5, பெருமாத்துப்பட்டை பலம் 10, இவைகளை காடித்தண்ணீரில் விட்டு இடித்து சாறு பிழிந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். தீரும்.

### 4. முகம் வீங்கும், கண் சிவந்திருக்கும், தீவனந்தின்னது.

அமுக்கிராவேர், குளப்பாளைக் கிழங்கு வகைக்குப் பலம் 2 அரைத்து பசுவின்பாலில் கொடுக்கவும். கருஊமத்த இலை, கருப்புக்கட்டி, நீத்தாத சுண்ணும்பு இவைகளை சமன் கூட்டி அரைத்து வீக்கத்தில் பூசவும்.

### 5. கன்னத்திலும், செவியிலும், நாரையிலும், அரையிலும வீங்கும்.

கரிப்பான் பலம் 5, பற்படாகம் பலம் 2, இரண்டையும் அரைத்து 1 படி காடித்தண்ணீரில் கலக்கிப் புகட்டவும். கொடுவேலிவேர் பட்டையை அரைத்து வெண்ணெயோடு குழப்பி வீக்கத்தில் பூசவும். இப்படி 3 நாள் செய்யவும்.

### 6. கன்னத்தில் வீங்கி, குன்னிக்கொண்டு இரை தின்னமல் நின்றல்.

அரைப்படி விளக்கெண்ணெயை உள்ளுக்குக் கொடுத்து 2-மணி நேரத்திற்குப்பின் 2 படி வெந்நீர்கொடுக்கவும். அரைமணிக்கு ஒரு தடவை நன்ருய் பேதி போகும் மட்டும் கொடுக்கவும். கன்னத்தில் வீக்கத்தில் 2-ம் நிம்பர் சூட்டைப் போடவும்.

7. எச்சல் வாயில் நெல்லிக்காய்போல் வீங்கும், கண்ணிமை தடிக்கும், தேகமெல்லாம் புள்ளி புள்ளியாய் விழும்.

*மாட்டுப்படத்தில் காட்டியபடி 3-ம் நிம்பர் சூட்டை இருவிலாவிலும், 4-ம நிம்பர் சூட்டை கழுத்திலும், 8-ம் சூட்டை எச்சல் வாய்க்குக் கீழேயும் போடவும்.*

8. தலை வீங்கும்.

*நெய்க்கொட்டான் வேர்பட்டை, நாய்க்கொட்டான் வேர்பட்டை, குளப்பாளை வேர்பட்டை வகைக்கு பலம் 3, சீரகம், கருஞ்சீரகம, கஸ்தூரி மஞ்சள், திப்பிலி வகைக்கு பலம் 1, பெருங்காயம் பலம் அரை இவைகளை அரைத்து வெந்நீரில் கொடுக்கவும். அவசியமானல் 3 நாள் கொடுக்கவும். சமயம்போல் கிடையாத மருந்தை நீக்கிச்செய்யலாம்.*

9. மாட்டின் வயிற்றின் ஒருபக்கத்தில் வீக்கம்போல் எழும்பித்தெரியும், தீவனந் தின்னது, தொண்டையில் அடைக்கும், கிடந்த கிடையில் கஷ்டப்படும், அல்லது வயிற்றின் இடதுபக்கத்தில் காற்று பொருமும், மாடு அடிக்கடி படுக்கிறதும் எழுந்திருக்கிறதும் வயிற்று வலிக்குரிய குறிப்போடு மூச்சுவிடும்.

*பெருந்தும்பைச்சாறு, சிறுதும்பைச்சாறு, வகைக்கு படி கால், சுக்கு பலம் 2, மிளகு, கடுகு வகைக்கு பலம் 3, திப்பிலி பலம் 1, நெய் படி அரை இவைகளில் கிடைக்கக் கூடிய 5 மருந்துகளை அதாவது குறைந்தபக்ஷம் ஒரு சாறும் மற்ற மருந்தும் சேர்த்துக் கொடுக்கவும்.*

10. மண்டை வீங்கும், வாயில் நீர் வடியும், வயிறு பொருமும், மயிர் சிலிர்க்கும், தொண்டைக்குள் அடைக்கும், நின்ற நிலையில் நிற்கும்.

வெள்ளைப்பூடு, சுக்கு வகைக்கு பலம் 1, கொளுஞ்சி இலை, எலிப்பிழுக்கை வகைக்கு பலம் 2, பேய்பீக்கஞ் சாறு படி அரை, மருந்துகளை அரைத்துப்போட்டு கலக்கிக் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இடதுவிலாவில் போடவும். 3 நாள் மருந்து கொடுக்கவும்.

11. நீர்த் தாரையிலிருந்து அடிவயிற்றிலும் நெஞ்சிலும் வீங்கும்.

2 பலம் மஞ்சள் கிழங்கை இடித்து பிழிந்தசாறும், கால்படி நல்லெண்ணெயும், 3 பலம் மிளகை அரைத்துப் போட்டுக் காய்ச்சி உள்ளுக்குப் புகட்டவும். 3-ம் நிம்பர் சூட்டை வீக்கத்தில் போடவும.

12. முன்னங்கால் திமிளைக்கட்டி வீங்கும், அல்லது முன்னங்கால் வீங்கும்.

வெள்ளைப்பூடு பலம் 1, மாவிலங்கு இலை பலம் 3, வசம்பு பலம் அரை, இவைகளை அரைத்து வெந்நீரில் கொடுக்கத்தீரும். பழையபுளி, உப்பு வகைக்கு பலம் 3, பழைய காடித்தண்ணீரில் கரைத்து கொதிக்கவைத்து இளஞ்சூடாயிருக்கும்போது வீக்கத்தில் பூசவும்.

13. உடம்பு வீங்கும், நாடியை பூமியில் அல்லது ஏதாவது ஒன்றில் தாங்க வைத்துக்கொண்டிருக்கும், குருவி நிற்கும், நீர் விடும்.

சுக்கு, வெள்ளைப்பூடு, திப்பிலி வகைக்கு பலம் 1, மிளகு, குப்பைமேனி, சிறுகீரை, தைவேளை வகைக்கு பலம் 3, சுருள்ளி பலம் 5 இவைகளில் கிடைக்கக்கூடிய 5 மருந்தை அரைத்து 2 படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

## 14. முன்னங்கால் தொப்புள் வரையும் வீங்கும்

தலைசுருளிவேர், வன்னிவேர், வகைக்கு பலம் 3, மூக்கரை சாரணைத்திவேர் பலம் 2, வெள்ளைப்பூடு பலம் 1 இவைகளை அரைத்து முக்கால் வாசியை 1 படி வெந்நீரில் கரைத்து உள்ளுக்குக் கொடுக்கவும். கால் வாசியை வீக்கத்தில் பூசவும். நெஞ்சில் 8-ம் நிம்பர் சூடுபோடவும்.

## 15. கழுத்தைக்கட்டி வீங்கும், அல்லது நாடி வீங்கும், மூக்கடைப்பான்போல் மூக்கையடைத்து கிரட்டைச் சத்தம் கேட்கும், மயிர்சிலிர்க்கும், தீவனம் சரியாய் தின்னாது.

பச்சை நாயுருவிக்கதிர் பிடி 1, அல்லது பலம் 1, இலுப்பைப் பிண்ணாக்கு பலம் அரை, கரியபோளம் பலம் ஒன்றரை, பச்சை நெல்தவிடு படி 2, பன்றிநெய் படி அரைக்கால் எல்லாவற்றையும் சேர்த்து சிறுநீரில் அல்லது கழுதை மூத்திரத்தில் பிசைந்து கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும். மூக்கைச் சுற்றிலும் வீக்கத்திலும் 8-ம் நிம்பர் சூடு போடவும்.

## 16. இருவிலாவிலும் வயிற்றிலும் வீங்கும்.

இதற்கு 13-ம் நிம்பர் உடம்பு வீக்கத்திற்கு சொல்லிய பக்குவத்தைச் செய்யவும்.

17. நெஞ்சு வீங்கும், இரத்தமாய் நீர் விடும், வருத்தப்படும், தீவனம் தின்னாது, தண்ணீர் அதிகமாகக் குடிக்கும்.

ஆலம் விழுதுக்கொழுந்து, விஷ்ணு கிராந்தி, ஓரிதழ் தாமரை இவைகளில் கிடைக்கக்கூடியவைகளை வகைக்கு 3 பலம் சேர்த்து அரைத்து பசுவின் பாலில் அல்லது மோரில் கொடுக்கவும். நெஞ்சு வீக்கத்தில் 8-ம் நிம்பர் சூடுபோடவும்.

18. இருகன்னமும் மூக்கும் வீங்கும், நிற்க மாட்டாமல் கீழேவிழுந்து படுக்கும், தலையை நீட்டிக்கொண்டிருக்கும், இரைதின்னாது.

கிலுகிலுப்பை சமூலம் பலம் 10, அல்லது மழுக்காரைதொலி பலம் 3, இலுப்பைப் பிண்ணாக்கு பலம் 1 அரைத்து சிறுநீர் படி 1-ல் கலக்கிக் கொடுக்கவும். இம் மருந்துகளையே அரைத்து தேகம் எங்கும் தப்பளம் போடவும். கொதிக்க வைக்காமல் கொஞ்சம் எடுத்து வடிகட்டி நசியம் விடவும்.

19. தேகமெல்லாம் வீங்கும். இது பாண்டு நோய்.

தேகத்திற்குச் சொல்லிய வரிசையில் 16-வது பார்க்க.

20. கோல்புறத்திலும் பீசத்திலும் வீங்கும், வயிறூதும், கண் குழிவிழும், தீவனந்தின்னாது.

அமுக்கிராவேர், முப்புரமெரித்தான் வேர், கொடுப்பைவேர், சிறுகுமட்டிவேர் வகைக்கு பலம் 2, அரைத்து 1 படி பசுவின் பாலில் கலக்கிக் கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும். 3-ம் நிம்பர் சூட்டை இரு விலாவிலும் போடவும். மூன்று நாள் மருந்து கொடுக்கத் தீரும்.

21. கழுத்தைக்கட்டி அதிகமாக வீங்கும், வயிற்றுவலிபோல் படுக்கும், எழுந்திருக்கும், உடலை ஆட்டும்.

கால்படி வேப்பெண்ணெயில் 1 பலம் எருக்கலம் பூவைப்போட்டுக்காய்ச்சி 1படி தவிட்டை 1 படி வெந்நீரில் கலக்கி எல்லாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்துக்கொடுக்கவும். சுக்கு, வசம்பு, வகைக்கு பலம் 1 அரைத்து, கழுதையினுடைய ஈரமான விட்டை 3 பலம் சேர்த்து குழைத்து வீசகத்திலும் முதுகிலும் பூசவும். வீக்கத்தில் நெருங்க 8-ம் நிம்பர் சூடுபோல் போடவும்.

22. நெஞ்சிலும் நாளையிலும் வீக்கமுண்டாகும்

இதே அத்தியாயம் 4-ம் நிம்பரில் சொல்லப்பட்ட மேல் பூச்சை வீக்கத்தில் பூசவும்.

23. வேலையினால் கழுத்து வீங்கினால் அதாவது முன்பாரத்தில் நுகம் அழுத்தி கழுத்து வீங்கினால்.

சுண்ணாம்பையும், ஊமத்த இலையையும் அரைத்து வீக்கத்தில் கனதியாய்ப் பூசவும். அல்லது அரைப் பலம் சீனக்காரத்தை 1 படி தண்ணீரில்போட்டு (கொதிக்க வைக்கப்படாது) வீக்கத்தில் போதுமான சுத்தமான வெள்ளைத்துணியைக் கட்டி அதை தண்ணீரால் காயாமல் 3 நாள் நனைத்துவந்தால் வீக்கம் வற்றும்.

24. தேகமெல்லாம் வீங்கினாலும், வீங்கி நின்ற நிலை பெயராதிருந்தாலும்.

2 பலம் கரியபோளத்தை வெந்நீரில் கரைத்து இறுத்துக்கொடுக்கவும். 2-மணி நேரத்திற்குப்பின் 2 படி வெந்நீர் வீதம் அரை மணிக்கு ஒரு தடவையாக 4 தடவை கொடுக்க பேதியாகும். நோய் குணமாகும். குணமாகாதிருந்தால் வாதத்திற்கு சொல்லப்பட்ட மருந்தைக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும்.

25. மாட்டின் தொப்புள் வீங்கும், 8 நாளைக்குப் பின் தொப்புள் வெடித்து அதில் உதப்பி சாயும்.

இதை கைவிட்டுச் சோதித்தால் மேல்குடல் இரைப்பையிலிருந்து பொத்து அதிலிருந்து குடல்போல் தொப்புள்வரையும் வந்து, தொப்புளைப் பொத்துக்கொண்டு வெளியே உதப்பி சாயும். இதற்குப் பக்குவம் செய்வது கூடாத காரியம்.

26. முகம் வீங்கும், அழிமேய்ச்சலாய் மேயும், அடிக்கடி சொருக்குநீர் விடும்.

தண்ணீர் நன்றாய் குடியாது. சாணி பிழுக்கையாயிருக்கும். இது நல்ல பசமாட்டில் உண்டாகும்.

வல்லாரை, வில்வ இலை வகைக்கு பலம் ஏழரை, கடுக்காய் 1 பலம், தட்டிப்போட்டு 7 படி தண்ணீரில வேகவைத்து, 6 படியாக வற்றவைத்து, 1 தடவைக்கு 2 படி தண்ணீராக 3 நாள் கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இரு விலாவிலும் போடவும்.

## XII. விஷம்.

1. *a.* நல்லபாம்பு கடித்தால் வாயிலிருந்து வெண்ணுரை தள்ளும், கண்பட்டை ரோமத்தைப் பிடுங்கினால் இலேசாய் வந்துவிடும், வயிறூதும்.

*b.* விரியன் பாம்பு கடித்தால் கண் கால் விதர்வீங்கும், நாக்கை சோதித்தால் தடித்திருக்கும், உடல் முழுவதும் வீங்கும், வயிறூதும்.

*c.* இரத்தவிரியன் கடித்தால் இரண்டு கண்களும் இரத்தமாக இருக்கும், நாலு காலும் பதறும், வயிறூதும்,

*d.* புடையன் பாம்பு காலில் கடித்தால் கால் தூண்போல் வீங்கும், பிற்காலத்தில் உடம்பு விரியும்.

*e.* சாரைப் பாம்பு வாலால் அடித்தால் கண்தெரியாமல் நிற்கும்.

*f.* பொரிவண்டு கடித்தால் தேகத்தில் புள்ளியாய் தெரியும்.

*g.* புலிமுகப்பூச்சி கடித்தால் வாய் புண்ணாகும், மூக்கடைக்கும், தீவனந் தின்னாது.

*h.* தேள் கொட்டினால் தேள் கொட்டிய இடத்தில் வியர்க்கும். யானை,

எருமை, பன்றி முதலியவைகளைக் கோட்டினால் பிழையாது.

## பக்குவம்.

குருஞ்சா இலை சாறு படி அரை, நெல்லிப்பட்டை பலம் 5, வேலிப்பருத்தி இலை பலம் 10, அதிமதுரம் பலம் 5, இலுப்பைப் பிண்ணாக்கு பலம் 1, ஆம்பல் பூ பலம் 5, கோவை இலை பலம் 5, வெள்வேலாம் பட்டை, மூக்கரைசாரணைவேர் வகைக்கு பலம் 3, இவைகளில் காட்டிய அளவுப்படி 2 அல்லது 3 மருந்துகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.

மயங்கிக்கிடக்கிற மாட்டுக்கு விஷமல்லி இலை, இலுப்பைப்பிண்ணாக்கு, வேலிப்பருத்தி இலை, இவைகளில் கிடைக்கக் கூடியதை அரைத்து காதிலும், கண்ணிலும் பிழியவும்.

கடுமையான விஷங்களுக்கு டி மருந்துகளைச்செய்து கொடுக்க காலதாமதமாகும். விஷ மை செய்துவைத்திருந்தால் மட்டும் பிரயோஜனப்படும். விஷம் தீண்டின மாட்டுக்கு மிளகு அரைத்துக் கொடுக்கப்படாது. மனிதருக்கும் அப்படியே மிளகைக் கொடுத்து விஷம் ஏறியிருக்கிறதாவென்று சோதிக்கப்படாது.

## விஷ மை.

வெள்ளைப்பாஷாணம், ரசம், கெந்தகம் மனோசிலை, பெருங்காயம். துருசு, வேப்பமுத்தின் அரிசி, வகைக்கு கூ இடை அரை, சுத்திசெய்த நேர்வாளம் முத்துப்பருப்பு கூ இடை 1. இவைகளை எருக்கலம் பால் வீசம்படி விட்டு எழரை நாழிகை அரைத்து வேப்பெண்ணெய்

அரை வீசம்படி விட்டு மூன்றேமுக்கால் நாழிகை அரைத்து கொம்புச்சிமிழில் அடைத்து வைத்துக்கொண்டு மாட்டுக்கு 2 குன்றிமுத்து வீதமும், மனிதருக்கு பாசிப்பயறு அளவும் வெற்றிலையில் கொடுக்கவும். வாய் கட்டியிருந்தால் வாயை எப்படியாவது திறந்து, தென்னித் திறந்து மருந்தை வெந்நீரில் சேர்த்து உள்ளுக்குப்போய்ச் சேரும்படி செய்தால் மருந்து வயிற்றுக்குள் போய் முக்கால்மணி நேரம் மனுஷனானாலும் மாடானாலும் உயிரோடிருந்தால் விஷம் மயக்கம் நீங்கி எழுந்திருக்கக்கூடும். விஷத்தினால் மாட்டின் முடி உதிர்ந்தாலும் குப்பைமேனி, நாகமல்லி வகைக்கு 3 பலம் சேர்த்து இடித்து தனிச்சாறு பிழிந்து சமன் பசுவின்பால் சேர்த்து ஒட்டில்விட்டு சூரியபுடம் வைத்து போட்டுவந்தால் முடி வளரும்

## 2. விஷந்தீண்டின மாட்டுக்கு விசேஷித்த கலிக்கம்

பசுமாட்டின் பித்து ஒன்றில் கால் பலம் சுக்கைச் சேர்த்து, கொடிக்கள்ளிப் பால் விட்டரைத்து அப்புறம் வேலிப்பருத்தி இலைச் சாற்றில் அரைத்து மிளகு பரிமாணம் உருண்டைசெய்து வைத்திருந்து பாலில் உரசிக் கண்ணில் விடவும்.

## 3. நஞ்சுகளுக்கு முறிவு அல்லது மாற்று.

எட்டிக்கு நவ்வல் இருதோன்றி சாதிக்காய்
வட்ட மலர் தாமரை ஊமத்திக்கு—ஒட்டியே
ஆவரையாம் கள்ளி அரளிக் கிடுகடுக்காய்
மேவிய நெய்தேனுக்கு வெந்தகரி—பாவேரி
எள்ளோடு சர்க்கரை என்றார் எருக்குக்கு—
வள்ளலே

சங்காம் கழுதை வண்டுக்கு—மெள்ளவே
நீற்றுக்கு மஞ்சளாம் நேர்வாளம் நல்வசம்பு
போற்றும் சிவதைக்கு வெள்வேலாம் போற்றியே
நெல்லின் வேர் சர்க்கரையும் நோாகக்
கொண்டோர்கள்
எல்லாருக்கும் சொன்னேம் லாமிச்சி நல்லாய் கேள்
நாபி சிறுகீரை நற்குன்றி வெண்றிகாரம்
தாவிய பாஷாணம் தனிமிளகு—ஓவியம்
வெற்றிலையோடெண்ணெய் விளாவிக் குடிப்
போருக்கு
முற்றின தேங்காயும் முடிந்தோமே—இத்தனையும்
நீலிக்குத்திருமென்று நிச்சயமாய் முடியுமென்று
போதித்தார் முனிவர் போகுமென்று.

## XIII. சன்னி, வலிப்பு.

1. நாக்கைச் சுருட்டி இழுத்துக்கொள்ளும், அல்லது கழுத்தை மடக்கும், நாலு காலும் நடை கூடாது, நிமர்ந்து நில்லாது நேளிக்கும், பிட்டாணியை தாழ்த்தும்.

முடக்கொத்தான் சமூலம் பலம் 10, இடித்து அரைப்படி சாறு பிழிந்து கொடுக்கத் தீரும். முதலாம் நிம்பர் சூட்டை காலில்போடவும். மேழெசொல்லிய 2-ம் நிம்பரில் சொல்லிய துவாலை ஒத்தணம் அவசியமானல் செய்யலாம்.

2. கழுத்தைச் சாய்த்து வானத்தைப்பார்த்து குந்தி இருக்கும், பின்னங்கால் இரண்டும் நடுங்கும், தடுமாறும், உலர்ந்த சாணம் பிழுக்கையாய் போடும், மாடு அசந்துபோம்.

86



முடக்கொத்தான் சாறு படி அரை, வேப்பெண் ணெய் படி கால்; இரண்டையும் கலந்து புகட்டவும். காலே யரைக்கால்படி வேப்பெண்ணெயில் எருக்கலம் பால் அரைவீசம் படி, பன்றி நெய் கால்படி சனிகாயிறு, வசம்பு, சுக்கு, வெள்ளைப்பூடு வகைக்கு அரைப் பலம் அரைத்து கொதிக்கவைத்து தவாலைபோடவும். இதோடு எருக்கலம் பூவை இடித்து துணியில் பொதிந்து இரும்புச்சட்டியில் வேப்பெண்ணெய் விட்டுக்காய்ச்சி இளவெதும்பலாய் ஆற வைத்து தொட்டு ஒத்தணம் கொடுக்கவும். கொம்பைச் சுற்றி 6-ம் நிர். சூடும் நெற்றியில் 8-ம் நிம்பர் சூடும் இடது விலாவில் 3-ம் நிர். சூடும் போடவும்.

## 3. வலிப்புக்காணும், வாயில் வெண்நுரை தள்ளும், மனிதரை பாயும்.

கருங்குன்றிமுத்துச்செடி சமூலம் 20 பலம் கொண் டுவந்து காடி விட்டு இடித்து ஒருபடிசாறுபிழிந்து கொடுக் கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும். இடது விலாவில் 3-ம்நிட சூடுபோடவும். செடி அதிகம் கிடைக்காவிட் டால்கிடைத்த அளவில் செய்யலாம்.

## 4. உடலை திருக்கி முறுக்கி வலிப்புக்காணும், தடுமாறி நிற்கும், சிலவேளை வாயில் இரத்தமும் விழும்.

ஆனைலத்தி, குதிரைலத்தி வகைக்கு பலம் 2, ஆனைநெரிஞ்சி பலம் 5. குட்டித்தக்காளி இலைச்சாறு படி அரை, இடித்து ஒருபடி சாறு எடுத்து புகட்டவும் இப்படி 3 நாள் கொடுக்கவும். 3-ம் நிட சூடு இருவிலாவி லும் போடவும்.

5. திருகி முறுகி கீழேவிழும், கண் சிவக்கும், சாணம் போடாது.

நல்லெண்ணெய், கொடிக்கள்ளிச்சாறு, வெள்ளருகுச்சாறு வகைக்கு படி கால், கலந்து கொடுக்கவும். 3-ம் நிம்பர் சூட்டை இடதுவிலாவில் போடவும்.

6. கழுத்தை கோணவைக்கும், சரியாய் இரை தின்னாது.

நத்தைச்சூரி விதையை நன்ருய் அரைத்து கால்படி சாராயத்தில் கலக்கிக் கொடுக்கவும். அல்லது

சீரகம் பலம் 2, ஏலம் பலம் கால், கரும்புச் சர்க்கரை பலம் மூன்று, இவைகளை அரைத்து வெந்நீரில் கலக்கிக்கொடுக்கவும்.

7. திருகி முறுகி வலித்திழுக்கும், ஒரு இடமாய் நில்லாமல் சுற்றி இழுக்கும், தடுமாறும்.

குதிரை அல்லது கழுதை இவைகளில் கிடைக்கக்கூடிய லத்திச்சாறு படி காலேயரைக்கால் கலக்கிக் கொடுக்கவும். தேகத்தில் ஆனைநெரிஞ்சிலை அரைத்து தீவாலைபோடவும். 4 காலிலும் 1-ம் நிர். சூட்டைப்போடவும்.

8. தள்ளம்பாறி விழும், 4 காலையும் இழுக்கும், தலையை ஏறவாங்கி வாயில் நுரை தள்ளும், கண்ணையுருட்டி விழிக்கும், அல்லது கண்ணைச் சொருகி படபடத்து விழும்.

சுடலாவரை இலை, சாளைக்கருவாடு வகைக்கு பலம் 3, கிருங்குன்றிமுத்துச்செடி 5 பலம் இடித்து எடுத்துச்

சாறு படி அரை, பனங்கள்ளு படி 1, சனிநாயிறு பலம் முக்கால், கழுதை மூத்திரம் படி அரை, கிடைக்கக்கூடியவைகளைச் சேர்த்துக் கொடுக்கவும், குடிக்க வெந்நீர் விடவும். இருவிலாவிலும் 3-ம் நிம்பர் சூடுபோடவும். 4 காலிலும் முதலாம் நிர் சூடுபோடவும். காலையில் மாட்டின் தலையில் 25 குடம் தண்ணீர்விட்டு துடைக்கவும்.

### 9. நினையாத நேரத்தில் கீழே விழுந்து வலிப்புத்தோன்றி இழுக்கும்.

காக்கையைப் பிடித்து தோலை உரித்து தலை கால் இறகு குடல் நீக்கி 2 படி தண்ணீரில் நன்றாய் வேகவைத்து எலும்பை உதறிநன்றாய் எடுத்துப்போட்டு 1 புட்டில் சாராயம் (16 அவுன்சு)] கலந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

### 10. பின்னங்காலைத் தூக்கி நிற்கும், வாயில் நுரை தள்ளும், இளஞ்சாணி போடும்.

6 மணி நேரத்துக்குப்பின்பு சில சமயம் வலிப்புக் காணும், இதை புல்மாரிநோய் என்று சொல்வார்கள். காலைப்பற்றிய அத்தியாயத்தின் கடைசியில் இதைப் பார்க்கலாம்.

## XIV. இரத்த சம்பந்தமான நோய்கள்.

### 1. சிவந்த சாணமாய் போடும்

3 பலம் தும்பை இலையை அரைத்து 2 படி புளிச்ச தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். இடதுவிலாவில் 3-ம் கூ சூட்டைப்போடவும்.

### 2. சாணியுடன் இரத்தம் விழும்.

2 பலம் கிலக்குமிழ் வேர்ப்பட்டையை அரைத்து எருமைத் தயிரில் கலக்கி புகட்டவும். இப்படி 3 நாள் காலையில் கொடுக்கவும்.

### 3. இரத்தமாய் பீச்சும், சவ்வு விழும், நாறும், கருபுரு என்றிரைக்கும்.

கழிந்ததை கிண்டிப்பார்த்தால் பாலாடைபோலிருக்கும். குன்றிமுத்துச்செடி 20 பலம் காடி தெளித்திடித்து 1 படி சாறு எடுத்துக்கொடுக்கவும் நடுமுதுகில் 3-ம் கிம்பர் சூடுபோடவும்.

### 4. இரத்தமாயும், தண்ணீராயும் கழியும்.

வீழி இலை பலம் 5, கல்லத்திப் பிஞ்சு பலம் 10, துத்திஇலை பலம் 2. அத்திப்பட்டை பலம் 10. விளாம் பிஞ்சு 10, இவைகளில் குறைந்த பக்ஷம் 3 மருந்தை காடி தெளித்திடித்து 1 படி சாறு எடுத்துக்கொடுக்கவும்.

### 5. சதை சதையாய் பீச்சிக் கழியும்.

தாழை விழுதுச்சாறு படி 1, நல்லெண்ணெய் படி கால், மிளகு பலம் 3. மிளகை அரைத்து மற்ற மருந்துகளுடன் கலந்து கொடுக்கவும்.

### 6. இரத்தம் சாணத்துடன் விழும், முக்கும், சலமும் விழும், சவ்வு விழும்.

அத்திப்பிஞ்சு பலம் 10, பூலாவேர்ப்பட்டை, ஆவரம்பூ வகைக்கு பலம் 4, தவிடு படி கால், இவைகளை அரைத்து புளித்த தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும் அல்லது 20 அல்விக்காயை அரைத்து புளித்த தண்ணீரில் கலக்கிப் புகட்டத்தீரும். அல்லது கல்லத்திப்பட்டை,

நல்வற்பட்டை வகைக்கு பலம் 10, தென்னம்பூப் பாளை 1, சீரகம் பலம் 1, வெங்காயம் பலம் 5, ஆவரக்கொழுந்து பலம் 3, விடத்தைக் கொழுந்து பலம் 3. இவைகளில் 4 மருந்தை பசுவின் பாலில் கொடுக்கத்தீரும். இடது விலாவில் 3-ம் நிம்பர் சூடு போடவும்.

7. நீர்த்தாரைவழியாய் பசுவுக்கு இரத்தமாய் இறங்கும்.--இதை பெரும்பாடு என்று சொல்லலாம்.

செங்கழுநீர் தண்டு சாறுபடி அரை, லாமிச்சவேர் பலம் 2. அரைத்து ஷை சாற்றில் கலக்கிக்கொடுக்கவும். அல்லது அகத்தி இலை தனிச்சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி கால், சந்தன அத்தர் ௬ இடை ஒன்றரை, இம்மூன்றையும் ஒன்றாய் கலந்து கொடுக்கவும், அல்லது இலுப்பை இலை பலம் 10, இடித்து 1 படி காடிவிட்டு சாறு பிழிந்து கொடுக்கவும், அல்லது 8 பலம் யானைநெருஞ்சி இலையை இடித்து காடித்தண்ணீர்விட்டு பிசைந்த சாறு படி 1, எலுமிச்சம்பழச்சாறு படி கால், பழம்புளி பலம் 3, காடிச்சோறு 3 கை, தாழை விழுதுச்சாறு படி அரை, இவைகளில் கிடைக்கக்கூடிய 3 மருந்தைச் சேர்த்துக்கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும்.

8. நீர் இரத்தமாக இறங்கும், முதுகை வளைத்து நிற்கும், வருத்தத்தோடு மூச்சுவிடும், வயிற்றுவலி காணும், மாடு அயர்ந்து காணும், நடத்தினால் நடக்க வருத்தப்படும். இந்நோயை கண்டுகொள்வது இலேசல்ல. 6-மணிநேரத்திற்குள்மாடு செத்துப்போகும்.

இந்த நோயை அறிந்த மாத்திரத்தில் அரைப்படி விளக்கெண்ணெயைக் கொடுத்து 1 மணி நேரத்துக்குப்பின் 2 படி வெந்நீர் கொடுத்து அப்பால் அரை மணிக்கு ஒரு தடவை வெந்நீர் கொடுக்கவும், வயிற்றுவலி காணப்பட்டால் வயிற்றில் ஒத்தணம் கொடுக்கவும்.

9. நீர் இரத்தமாயிறங்கும்.

தென்னம்பூப்பாளை 1, நெல்லிக்காய் படி 1, இடித்து புளிச்சதண்ணீரில் கலக்கிக் கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும்.

10. இரத்தமாக நீர்விடும், சாணிபோடாது, தீவனந்தின்னாது, தண்ணீர் அதிகமாக குடிக்கும்.

கடுகு பலம் அரை, வசம்பு பலம் கால், முருங்கை இலை பலம் 5, பளம்பாசி இலை பலம் 3, அரைத்து 1 படி புளித்த தண்ணீரில் கலக்கிக்கொடுக்கவும். 3-ம் நீர். சூட்டை இடதுவிலாவில் போடவும். 3 நாள் மருந்து கொடுக்கவேண்டும்.

11. இரத்தம் நீர்த்தாரையிலிருந்து விழும், கண்ணில் பீளைசாடும், பல்லைக்கடிக்கும், செவிதாழும்.

கொடுப்பைச்சாறு படி அரை, பேய்க்குமிட்டிக்காய் சாறு, நல்லெண்ணெய் வகைக்குப்படி கால், அகத்தி இலைச்சாறு படி 1, சந்தன அத்தர் ரூ. இடை ஒன்று அல்லது 1 பலம் சந்தனம், கோட்டம். தேவதாரம், பேப்புடல் வகைக்கு பலம் கால், இவைகளில் கிடைக்கக்கூடிய 6 மருந்தைச் சேர்த்து அரைத்து கலக்கிக்கொடுக்கவும்.

### 12. இரத்தமாய் நீர்விடும், நெஞ்சு விங்கும்.

ஒரிதாள் தாமரை விஷ்ணுகிராந்தி வகைக்குப்பலம் 5. இரண்டையும் பசுவின் மோர்விட்டு இடித்து 1 படி சாறு எடுத்து புகட்டவும். 3-ம் நிர். குட்டை இடது விலாவில் போடவும்.

### 13. மூக்கிலும் வாயிலும் இரத்தம் விழும்.

சீரகம் பலம் 3, எலுமிச்சப்பழச்சாறு படி கால், இளநீர் படி 1, காடிச்சோறு 3 கை, புளித்த எருமை மோர் படி 1, எல்லாம் கலந்து கொடுக்கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

## XV. தோலின்மேல் அல்லது தேகத்தின்மேல் காணப்படுகிற நோய்கள்.

### 1. தேகமெங்கும் வெடிக்கும், உடம்பு மெலியும், நடுங்கும்.

வெங்காயம், அவுரி இலை வகைக்கு பலம் 2 வசம்பு பலம் அரை, மாங்கொட்டைப்பருப்பு பலம் 2, இவைகளை அரைத்து பசுவுக்கு எருமைப் பாலிலும், எருமைக்கு பசுவின் பாலிலும் கொடுக்கவும்.

### 2. தேகமெங்கும் பலாக்காய் முள்ளுபோல் தோன்றும், வாய் புண்ணாகும்.

வெங்காயம் பலம் 10, வெள்ளைப்பூடு பலம் 1, பெருங்காயம் பலம் கால், இவைகளை அரைத்து மோர் படி 2 அல்லது சிறுநீரில் கலக்கி புகட்டவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

3. தேகமெல்லாம் வியர்வை யுண்டாகும், குன்னி நிற்கும், வாயிலிருந்து இரத்தம் விழுந்தாலும் விழும்.

*வெள்ளைப்பூடு பலம் 1, வேலிப்பருத்தி பலம் 3, அரைத்து மோர் படி 1-ல் கலக்கிக் கொடுக்கவும், 3-ம் நீர். சூட்டை இருவிலாவிலும் போடவும்.*

4. தேகமெங்கும் தடிக்கும்

*சுக்கு, மிளகு, திப்பிலி, வகைக்கு பலம் 1, நொச்சிக்கொழுந்து பலம் 3, அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும்.*

5. தேகம் சுடும், அசதியாய் நிற்கும், இரை தின்னாது, ரோமம் சிலிர்க்கும், செவி தாழும், நடுக்கங் காணும், கழுத்து நரம்பை விலாவை சாய்த்து இழுக்கும், வாய் புண்ணாகும், கண்களிலிருந்து தண்ணீர் வடியும், இரண்டு மூன்று நாள் செல்ல தீவனங்குறையும், வயிற்றோட்டமுண்டாகி அதிகப்படும், முக்கலுண்டாகும், வயிற்றுவலியினால் படுக்கும், எழுந்திருக்கும், துரிதமாய் மூச்சுவிடும்.

*இந்த வியாதிக்கு வயிற்றோட்டமுண்டானாலுங்கூட, முதலாவது செய்யவேண்டியது, அரைப்படி விளக்கெண்ணெயை உள்ளுக்குக்கொடுதது 2 மணி நேரத்துக்குப் பின் 2 படி வெந்நீர் வீதம் அரை மணிக்கு ஒரு தடவையாக மூன்று, நாலு தடவை கொடுக்கவேண்டும். பேதி போய் தன்னால் நின்றுகொள்ளும். பேதியை நிறுத்த வேண்டுமானால் 3 பலம் மிளகும், 5 பலம் வெற்றிலையும் அரைத்து வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவேண்டும்.*

காய்ச்சலிருந்தால் நிலவேம்பு பலம் 2, சூடம், பொட்டிலுப்பு வகைக்கு ரூ. இடை அரை, இவைகளை அரைத்து 3 வீசம்படி சாராயத்தில் கலக்கிக்கொடுக்கவும். மாடு மெலிந்து பலவீனப்படாதபடி கஞ்சி புகட்டவும். மற்ற மாடுகளைவிட்டு பிரித்து தனிமையாய்தான் கட்டி வைத்தியஞ்செய்யவேண்டும்.

6. தேகத்திலுள்ள நரம்புகளை இழுத்து தலை உயர்த்திக்கொண்டு நிற்கும், வாலைத் தூக்கிக்கொண்டு நிற்கும், வாய்திறக்காமல் பல் பூண்டுபோகும், கிட்டிப் போகும், ஆளைக்கண்டு பயப்படும், துரிதமாய்மூச்சுவிடும், சாணிபோடாது.

அரைக்கால் ரூ. இடை நேர்வாளப்பருப்பை காலேயரைக்கால்படி விளக்கெண்ணெயில் அரைத்துப்போட்டுக் கொடுக்கவும். பின்பு ஊமத்த விதை மாகாணி ரூ. இடை, அபின் கால் ரூ. இடை, அரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டவும். நாள் ஒன்றுக்கு 2 தடவை கொடுக்கத்தீரும்.

7. உடலை முறுக்கிக் கீழே விழும், நாய்போலிளைக்கும், வெருண்டு வெருண்டு பார்க்கும்.

நொச்சிக்கொழுந்து, தைவேளை, குப்பைமேனி, வெற்றிலை வகைக்கு பலம் 2, கருஞ்சீரகம் பலம் ஒன்றரை சேர்த்து அரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டவும். ஷை மருந்துகளை அரைத்து முதுகு முழுவதும் துவாலை போடவும். முதுகை நன்றாய் தேய்க்கவும். உச்சி முதுகில் 7-ம் நீ சூடுபோடவும்.

8. தேகத்தில் கோப்புளமுண்டாகும், சில சமயத்தில் மாட்டின் தோல் சிவந்து, மயிர் சிலிர்த்து, கோப்புளங்களுண் டாகலாம்.

*2 பலம் கரியபோளத்தை வெந்நீரில் கரைத்து பேதிக்குக் கொடுக்கவும். சாணியைக்கரைத்து கொதிக்கவைத்து ஆறின இளஞ்சூட்டில் மேல் எல்லாம் பூசவும். சுடச் சுடப் பூசினால் முடிகள் உதிர்ந்துபோம்.*

9. தேகம் மிகவும் மெலிந்துபோம், அளவுக்கு மிஞ்சி சாணிபோடும்.

*ஒரு வீசை வெங்காயத்தை இடித்து 2 பலம் சன்ன லவங்கப்பட்டையை அரைத்து காடித்தண்ணீர் படி 2-ல் கலக்கிக் கொடுக்கவும்.*

10. தேகமெல்லாம் தடிப்பு தடிப்பாக இருக்கும், மயிர் சிலிர்க்கும், வால் கூனையாகும், பெருஞ்சாணி போடும்.

*இதைத்தான் அரணைக்கடி என்று சொல்வதுண்டு. வாலைப்பற்றிய அத்தியாயத்தில் பார்க்கவும்.*

11. தேகமெல்லாம் கோப்புழிந்தும் சலமாக வடியும் அல்லது தேகத்தில் சிரங்கு போலுண்டாகி மயிர் சிலிர்த்து இரத்தம் வடியும், மீன் செதிள் போலும் கிளம்பும், உரோமம் உதிரும், அல்லது பலாக்காய் முள்ளுபோலும் கிளம்பும்.

*பேய்க்கரும்புச்சாறு, துளசிச்சாறு வகைக்கு படி அரை, அத்திப்பிஞ்சு, வெங்காயம் வகைக்கு பலம் 10, அதிமது*

ரம், லவங்கப்பட்டை வகைக்கு பலம் 1, பச்சரிசித் தவிடு படி ½, வேப்பஇலை பலம் 5, இவைகளில் கிடைக்கக் கூடிய 4 மருந்தைச் சேர்த்து அரைத்து கலக்கிக்கொடுக் கவும். இப்படி 3 நாள் கொடுக்கவும்.

பொடுதலை இலை, வேப்பஇலை வகைக்கு பலம் 5, வெள்ளைப்பூடு பலம் 1, இவைகளை அரைத்து அரை படி சிறுநீரில் கலக்கிக்கொடுக்கவேண்டும். இதே மருந்தை தேகத்தில் வேதும் போடவேண்டும்.

12. சரீரத்தில் நமச்சல் உண்டாகும், உரசும், ரோமம் உதிர்ந்து புண்ணுகும்.

நொச்சி இலை பலம் 1, எட்டிக்கொட்டை பலம் அரை, வசம்பு பலம் 1, வெங்காயம் பலம் 2, இவைகளை அரைத்து போதுமான விளக்கெண்ணெய்விட்டு பிசைந்து வெயிலில் வைத்து புண்ணில்போடவும்.

13. தேகத்தில் வங்குபோலிருக்கும், கண்ணில் பீளை சாடும், வாயில் நீர்வடியும்.

சுக்கு, மூக்கரைச்சாரணைவேர், ஓமம் வகைக்கு பலம் 1, வசம்பு பலம் அரை, வெங்காயம் பலம் 5, அரைத்து 2 படி வெந்நீரில் கலக்கிக் கொடுக்கவும். இடதுவிலாவில் 3-ம் கீறு சூடுபோடவும்.

14. சரீரத்தில் நமச்சலுண்டாகி எதிலாவது தேய்த்துக்கொள்ளும், வாயில் நீர்வடியும், நெடுமூச்சு வாங்கும், நடுங்கும்.

வெற்றிலை பலம் 5, கர்ப்பூரவல்லி பலம் அறரை வேப்பெண்ணெய் படி கால், சேர்த்துக்கொடுக்கவும். குடிக்க வெந்நீர் விடவும்.

15. தேகமெல்லாம் வீங்கினாலும், வீங்கி நின்ற நிலை பெயராதிருந்தாலும்.

2 பலம் கரியபோளத்தை வெந்நீரில் கலக்கி இறுத்துக்கொடுத்து 2 மணி நேரத்துக்குப்பின் வெந்நீர் 2 படி கொடுக்கவும். பேதி நன்றாய் போயும் குணமாகாவிட்டால் வாதத்துக்கு சொல்லப்பட்ட மருந்தை உள்ளுக்குக் கொடுக்கவும். காலைப்பற்றிய முறையில் 28, 29 பார்க்க.

16. தேகம் கருத்து குஷ்டம்போல் தோன்றும்.

எருக்கலம்பழுப்பு, வேலிப்பருத்தி இலை வகைக்கு பலம் 5, கொடிக்கள்ளி வாட்டிப்பிழிந்த சாறு படி ... ரைக்கால், மற்றச்சாறுகளும் இடித்துப் பிழிந்து எடுத்து ஒன்றாய் கலந்து பசுவின் மோர் படி 1-ல் சேர்த்துக்கொடுக்கவும். 3 நாள் இப்படிக் கொடுக்க குணமாகும்.

17. தேகத்தில் கோப்பளங்காணும், மயிர் சிலிர்க்கும், கண சிவந்து பீளைசாய தண்ணீர் வடியும், நாக்கைப்பார்த்தால் காசுபோல் தடித்திருக்கும், தலை யை குப்புறப்போட்டு நிற்கும்.

இதற்கு கண்ணைப்பற்றிய அத்தியாயத்தில் முதல வது சொல்லி இருக்கிறது.

18. உடம்பெங்கும் குஷ்டம்போல் விழுந்திருக்கும், இரத்தம் விழும், நாலு காலையும் உதறிக்கொண்டு நிற்கும், செவிதாழும்.

காலைப்பற்றியதில் 3-வது பார்.

19. சரீரத்தை தேய்த்துக்கொண்டே நிற்கும், தீவனந்தின்னாது.

52-



நன்னாரிவேர் பலம் 10, கருப்புக்கட்டி பலம் 5, வேரை அரைத்து 2 படி தண்ணீரில் இரண்டையும் கலக்கிக்கொடுக்கவும். 3 நாள் கொடுக்கவும். வெள்ளைச்சாரணத்தி சமூலம் தட்டி சிறுநீரில் கலக்கி நாசியில் பிழியவும்.

## 20. தேகத்தை அலைத்துக்கொண்டே நிற்கும், நாலு காலையும் மெல்லடியாய் வைக்கும்.

காலைப்பற்றிய குறிப்பில் 25-வது பார்க்கவும்.

## 21. தேகத்தில் நினையாத நேரத்திலும் இடத்திலும் இரத்தம் வடியும்.

இதைத்தான் புழுக்கடி என்பார்கள்.

மூத்தெருக்கன் என்ற நிலக்கடம்பும் சுண்ணாம்பும் ஒரு தேங்காயளவு சமன்சேர்த்து மாட்டின் மேல்முழுவதும் பூசவேண்டும், அல்லது வெள்ளை நொச்சி இலை 3 பலம், வசம்பு 3 பலம் புங்க இலை 3 பலம் ஒவ்வொன்றையும் அரைத்து கால்படி சுண்ணாம்பும் சேர்த்துக்கரைத்து தேகத்தில் பூசவும். ஷை மருந்துகளை 3 நாளைக்கு உபயோகிக்கவும். அரைப்பலம் பெருங்காயத்தைக் கரைத்து ஷை மருந்தை மேல்பற்றுப்போடுகிற காலத்தில் உள்ளுக்கும் கொடுக்கவேண்டும். இப்படி 3 நாள் செய்யவேண்டும்.

## 22. நமச்சலுண்டாகி தேகத்தை உரசும், தேக முழுவதும் சொறிச் சொறியாயிருக்கும்.

கார்பாலிக் ஆசிட் 1 பங்கும் தேங்காய் எண்ணெய் 15 பங்குவீதம் சேர்த்துப்போட்டு 3 நாளைக்கு 1 தபாகுளிப்பாட்டி தேய்க்கவும், அல்லது

எட்டிக்கொட்டை, வசம்பு, ஈருள்ளி வகைக்கு 5 பலம் அரைத்து போதுமானபடி நல்ல விளக்கெண்ணெயில் போட்டு சூரியபுடம் வைத்துப் பூசவும்.

23. உடம்பெங்கும் வங்குபோல் உண்டாகும், கண்ணில் பீளை சாடும், வாயில் நீர் வடியும்.

வேலிப்பருத்தி வேர், மூக்கரைச்சாரணைவேர், முருங்கப்பட்டை வகைக்கு பலம் 1, அரைத்து வெந்நீரில் கலக்கி புகட்டவும், இப்படி 3 நாள் கொடுக்கவும். 3-ம் தீ சூட்டை இடது விலாவில் போடவும்.

24. மாட்டின் மடுவில் சிரங்கு வந்ததுபோல் புண்ணுண்டாகும், முக்கியமாய் பால் மாட்டிற்கு மடுவில் உண்டாகும்போது பால் குறையும். இதுதான் வைசூரி

பெரியமாட்டுக்கு அரைப்படி விளக்கெண்ணையை கொடுத்து மடுவிலும் விளக்கெண்ணெய் தடவவும்.)

KZ311:4:6
N27 85923

முற்றிற்று.

அமெரிக்கன் மிஷன் விளுக்ஸ் பிரஸ், பசுமலை—1927.

5/2/63

53-

என்னைச் சிநேகிக்கிறவர்கள் மெய்ப் பொருளைச் சுதந்தரிக்கும்படிக்கும், அவர்களுடைய களஞ்சியங்களை நான் நிரப்பும்படிக்கும், அவர்களை நீதியின் வழியிலும், நியாய பாதைகளுக்குள்ளும் நடத்துகிறேன்.

நீதி. 8: 20, 21.

பின்வரும் இடங்களில் இப்புஸ்தகம் பெற்றுக்கொள்ளலாம்.

வேதபோதகம் தாவீது,
மாட்டு வைத்தியர்,
பசமலை.

பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்,
புஸ்தகக்கடை,
புதுமண்டபம், மதுரை.